# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENT

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 245 சனி, ஜூலை 29, 2023 14 பக்கங்கள்


## இந்தியாவின் "பிடி" தளர்கின்றதா?

# தமிழ்க் கட்சிகளின் கையறு நிலை

அகிலன்



## 13ம் திருத்தம் – சமஷ்டியென்னும் அரசியல் பித்தலாட்டக்காரருக்குத் தவத்திரு முதுமுனைவர் தனிநாயக அடிகள் 80களிலேயே அளித்த பதில்

அறிவார்ந்த பண்பாட்டு மீட்டுணர்வு இயக்கம் மூலம் தேச உருவாக்கம் செய்யப்பட்டாலே அரசியல் விடுதலை சாத்தியமென்பதே

**உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் தோற்றக்காரணி**

ஆசிரியரும் ஆய்வாளருமான சூ.யோ. பற்றிமாகரன்

## வேகமாக மாறிவரும் உலக ஒழுங்கில் எமது நிலை என்ன?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



© 2023 இலக்கு இணையம்

## எமது நிலத்தை விட்டு வெளியேறு

### முல்லையில் போராட்டம் ஆரம்பம்






புதுக்குடியிருப்பு - கைவேலி பகுதியில் 20 குடும்பத்தின் காணிகளை வனவளத்திணைக்களத்தினர் ஆக்கிரமித்துள்ளனர் தங்களுடைய காணியை தங்களுக்கே பெற்றுத்தர கோரி உணவு தவிர்ப்புப் போரட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

## தமிழர்களுக்கு நியாயமான தீர்வினை வழங்க சர்வதேசம் தலையிடவேண்டும்

இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்கு முறை மற்றும், இனஅழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக, நியாயமான தீர்வினை வழங்க சர்வதேசம் நேரடியாகத் தலையிடவேண்டும் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைரசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச நியமத்தின் அடிப்படையில் கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுகள் இடம்பெறவேண்டும் என்பதுடன், சர்வதேசக் கண்காணிப்பில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவிருக்கின்றது.

இந் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும், பொறுப்புக் கூறல் விடயத்திலே இலங்கை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## வெளிவிவகார அமைச்சரை அதிரடியாக மாற்றியது சீனா



சீனாவின் வெளிவிவகார அமைச்சர் குயிங் ஹாங் ஏழு மாதங்களே பதவியில் அமர்த்தப்பட்ட நிலையில் திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்திற்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.


இந்த மாற்றம் சீனாவின் வெளிவிவகாரக் கொள்கையில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பாடசாலைகளில் தொலைபேசிகளுக்கு உலக மட்டத்தில் தடை – ஐ.நா

உலகில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களில் தொலைபேசி பாவனை முற்றாக தடை செய்யப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, கலாச்சாரம் மற்றும் விஞ்ஞானத்திற்கான அமைப்பான யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.

உலகில் நான்கு நாடுகளில் ஒரு நாடு ஏற்கனவே தொலைபேசி பாவனையை வகுப்பறைகளில் தடை செய்துள்ளது. இந்த பாவனையினால் மாணவர்களின் கவனம் சிதறுவதுடன், கல்வியிலும் வீழ்ச்சி ஏற்படுகின்றது.



தொலைபேசிப் பாவனை மாணவர்களின் உணர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான நேரிடையான

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மெடிற்றரேனியன் பகுதியில் பரவும் காட்டுத் தீ – பலர் உயிரிழப்பு

மெடிற்றரேனியன் பகுதியில் உள்ள 9 நாடுகளில் பரவும் காட்டுத் தீயினால் பலர் உயிரிழந்துள்ளனர். அல்ஜீரியாவில் 34 பேரும் இந்தாலியில் உள்ள சிசிலித் தீவில் 3 பேரும் உயிரிழந்துள்ளனர்.

அந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் இற்கு உயர்ந்துள்ளதால் 9 நாடுகளில் பாரிய காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதுடன் அதனை அணைப்பதற்கு பல ஆயிரம் தீயணைப்பு படையினர் போராடி வருகின்றனர்.



கிறீஸ் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 20,000 மக்கள் வெளியேறியுள்ளதுடன், தீயணைக்கும் பணியில் ஈடுபட்ட விமானம் வீழ்ந்து நொருங்கியதால் இரு விமானிகளும் கொல்லப் பட்டுள்ளனர்.

இந்த ஜுலை மாதம் அங்கு இடம்பெற்ற காட்டுத்தீயினால் ஒரு மெகா தொன் கார்பன்டை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## நைகர் நாட்டில் இராணுவப்புரட்சி - அரச தலைவர் நீக்கம்

நைகர் நாட்டின் அரச தலைவரை தாம் பதவியில் இருந்து அகற்றியுள்ளதாக அந்த நாட்டின் இராணுவம் கடந்த வியாழக்கிழமை (27) அறிவித்துள்ளது.



அரச தலைவர் மொஹமட் பசோமின் இல்லத்தை கடந்த புதன்கிழமை (26) முற்றுகையிட்ட அரச தலைவர் காவல் படையினர் மற்றும் இராணுவத்தினர் அரச தலைவரையும் அவரது குடும்பத்தையும் வீட்டுக் காவலில் வைத்ததுடன்பல அமைச்சர்களையும் சிறைப்படுத்தியிருந்தனர். அங்கு தற்போது எல்லைகள் மூடப்பட்டுள்ளதுடன், ஊரடங்குச்சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவறான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் நாட்டின் மோசமான பாதுகாப்பு சீர்கேடு ஆகிய காரணங்களால் தாம் தற்போதைய அரசின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாக இராணுவ அதிகாரி கேணல் மேஜர் அமடு அப்த்தமனே தொலைக் காட்சியில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளின் தலையீடுகளை தவிர்ப்பதற்காக தனது தலைமையிலான படை அதிகாரிகள் கொண்ட குழுவினர் தேசிய சபையை அமைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரை பதவி நீக்குவதை தாம் கண்டிப்பதாகவும், அரச தலைவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்டன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் முன்னாள் காலனித்துவ நாடான நைகரே இந்த பிராந்தியத்தில் மேற்குலக நாடுகள் தளம் அமைந்துள்ள இறுதி நாடாகும். அங்கு அமெரிக்கா இரண்டு ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தளத்தையும் 700 படையினரையும் கொண்டுள்ளது.

## சீனாவின் பூமி அதிர்வு கண்காணிப்பு மையம் மீது சைபர் தாக்குதல்

சீனாவின் வூஹான் மாகாணத்தில் உள்ள பூமி அதிர்வு கண்காணிப்பு மையம் மீது நாட்டுக்கு வெளியில் இருந்து சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சீனாவின் அவசரகாலநிலை முகாமைத்துவ பிரிவு கடந்த புதன்கிழமை (26) தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள பல்கலைக் கழகம் மீது கடந்த வருடம் ஜுன் மாதம் இதேபோன்ற தொரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்பகட்ட விசாரணைகளில் இந்த தாக்குதல் அமெரிக்காவில் இருந்து மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சைபர் தாக்குதலை தொடர்ந்து பாதிக்கப்பட்ட உபகரணங்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், பொதுமக்களின் பாதுகாப்பும் உசார் படுத்தப்பட்டிருந்தது.

Trojan horse program எனப்படும் கணணி வைரஸ் இந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய வைரஸ்கள் பூமி அதிர்வுகள் தொடர்பான தகவல்களை கணணிகளில் இருந்து திருடி அதனை கையாள்பவர்களுக்கு அனுப்பக் கூடியது. இத்தகைய தாக்குதல்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சர்வதேச கண்காணிப்பினையும், சர்வதேச விசாரணையினையும் வேண்டிநிற்கின்றோம்

## மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரிய போராட்டத்தில் கருத்து…

தமிழர் பகுதிகளில் காணப்படும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை. கொக்குத் தொடுவாயும் அவ்வாறு அரங்கேறிவிடக் கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும், கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நேற்று முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த...

**வேலன் சுவாமிகள்**

“கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விசாரணை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு இனப்படுகொலையினைச் செய்திருக்கக் கூடிய இனப்படுகொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலே நிறுத்தப்பட்டுத்தண்டிக்கப்படவேண்டும்.

2009ம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின்போது ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது, சரணடைந்த உறவுகளுக்கு என்ன நடந்தது, வீடுவீடாகச் சென்று கடந்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனக் கடந்த 14வருடங்களாக எமது தாய்மார்கள் வீதிகளிலும், கொழுத்துகின்ற வெய்யிலிலும் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர்.




இவ்வாறான சூழலில் அண்மையில் கொக்குத் தொடுவாயில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழி என்பது மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன அழிப்பினைச் செய்திருக்கக்கூடிய இந்த இலங்கை அரசும், அரசுடைய இயந்திரங்களும் இதற்கான விசாரணையினை முன்னெடுப்பதென்பது போலித் தனமானது. தமிழர்களான எமக்கு உள்ளக விசாரணையிலே நம்பிக்கையில்லை. ஆகையினால்தான் நாம் சர்வதேச கண்காணிப்பினையும், சர்வதேச விசாரணையினையும் வேண்டிநிற்கின்றோம்” என்றார்

**பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்**

“வடகிழக்கு தழுவிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் கொக்குதொடுவாயில் அளவு கணக்கு தெரியாதளவில் போராளிகள், மக்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இலக்கு

## ஈழத்தமிழர்களின் நிதியியல் தன்னாட்சி வளர்ச்சியே ஈழத்தமிழர் இறைமையைப் பாதுகாக்க ஒரேவழி

அமெரிக்க சீனாவின் உலகின் மீதான அதிகாரப் போட்டியாலான இரு முனைவாக்கத்தால் மீண்டும் காலனித்துவ பேரரசுருவாக்கம் தோன்றக்கூடிய புதிய உலக ஒழுங்குமுறையாக மாறக்கூடிய பேரபாயம் தோன்றியுள்ளதை இந்து பசுபிக் பெருங்கடல் கரைகளில் உள்ள சிறுதேசங்களின் இறைமை இழப்பு வெளிப்படுத்துகிறது என்று பிரான்சிய அரசத்தலைவர் மக்ரோன் கடந்த வாரத்தில் பசுபிக் மாக்கடலில் சீனா அமெரிக்கா அவுஸ்திரேலியா என்பவற்றுக்கு இடையில் அமைந்துள்ள பசுபிக் தீவுகளுக்கு சென்ற பின்னணியில் உலகுக்கு எச்சரிப்புச் செய்துள்ளார். அமெரிக்கா சீனா அவுஸ்திரேலியாவுக்கு இடையில் உள்ள பசுபிக் மாக்கடல் தீவுகளில் அமெரிக்கா செலுத்தி வந்த மேலாண்மை மூலமான காலனித்துவபாணி ஆட்சிப்படுத்தலுக்கு எதிராகச் சீனா அந்த நாடுகளுக்கான உதவிகளை அதிகரித்தல் பொருளாதார வளர்ச்சிகளை உருவாக்கல் ராஜதந்திரத்தொடர்புகளைக் கட்டமைத்தல், பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை ஏற்படுத்தல் என்கின்ற நால்வகையான முயற்சிகள் வழியாக தனது மேலாண்மையைப் பலப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலியா பிரான்சுக்கு 90 பில்லியன் டொலர்கள் நட்டத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் 2021இல் அதனுடான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையினை விலக்கி அமெரிக்காவுடனும் பிரித்தானியாவுடனுமான உடன்படிக்கையின் வழி அணுவாயுத நீர்மூழ்கிக்கப்பலை பெற எடுத்த செயற்பாடுகள் பிரான்சுக்கு மீளவும் ஆங்கிலம் பேசும் காலனித்துவப் பேரரசு ஒன்றுக்கான தொடக்கமாகிறது என்ற பலத்த சந்தேகத்தை விளைவித்தது. இது அவுஸ்திரேலிய பிரான்சு உறவில் நம்பிக்கையீனங்களை தோற்றுவித்த நிலையில் ஆசியநாடுகளின் இந்துமாக்கடல் வலயம் என்பது புதிய காலனித்துவ பேரரசுக்கள் பசுபிக் இந்துமாக்கடல்களில் தோன்றுவதைத் தடுக்கும் உலகப்பாதுகாப்பாக அமையும் என்ற நம்பிக்கையை உலகநாடுகளிடை வேகமாக வளர்ச்சியடையச் செய்கிறது. இந்த எதிர்பார்ப்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சிறிலங்கா ஜனாதிபதி அவரது பிரித்தானியா வருகையைத் தொடர்ந்து பிரான்சுக்கும் சென்று இருநாடுகளுக்கும் சிறிலங்கா அவற்றின் தேவைகளுக்கு ஏற்ப உதவும் என்ற உறுதிப்பாட்டைத் தோற்றுவித்தார். இந்த சிங்கள ராஜதந்திரத்தின் தொடர்ச்சியாக சிறிலங்காவுக்கு அதன் வரலாற்றில் முதன்முதல் வருகைபுரிந்த பிரான்சிய ஜனாதிபதியாக பிரான்சிய ஜனாதிபதி மக்ரோன் கடந்த வெள்ளிக்கிழமை வருகை புரிந்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி இந்தியாவுக்கு கடந்த வாரத்தில் சென்று, மாக்கடல்களை மையப்படுத்திய புதிய அரசியல் சூழ்நிலையை எதிர்கொள்ள இந்தியா எடுக்கும் முற்பாதுகாப்புச் செயற்திட்டங்களில் தன்னையும் இணைத்து தான் இந்தியாவின் பங்காளியாகவும் பயணிக்க உறுதியளித்ததும் அல்லாமல் இந்தியாவின் ரூபாவில் சிறிலங்காவின் அனைத்துலக வர்த்தகத்தை முன்னெடுக்கச் சிறிலங்காவை ஊக்குவிக்கும் இந்தியாவின் தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டார். அதற்காக இந்தியாவிடம் இருந்து தான் பெறக்கூடிய உச்சக்கட்டப் பயன்களைப் பெறுவதற்கான அடித்தளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும் செய்தார். இந்நிலையில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் கனவாக இருந்த இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த ரணில் விக்கிரமசிங்காவுக்கு அழுத்தம் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பு வெறுமனே வாயளவில் 13ம் திருத்தத்தின் அடிப்படையில் மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி இலங்கைத் தமிழர்களுக்கான கண்ணியமான வாழ்வை கொடுங்கள் என்ற இந்தியப் பிரதமரின் வேண்டுகோளாக முடிந்தது. அதற்கு எந்தப் பதிலும் அளிக்காமல் ரணில் விக்கிரமசிங்கா தனது உரையை நிகழ்த்தி இந்தியாவுக்குச் சிறிலங்காவின் உள்நாட்டு விடயங்களில் தலையிடும் உரிமை இல்லையென ராஜதந்திரமுறையில் வெளிப்படுத்திக் கொண்டார். இதனை "நிறைவேறாத நிலையில்" என்ற ஆசிரிய தலையங்கத்தின் மூலம் ‘த இந்து’ உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இந்தியா இலங்கைத் தமிழர்கள் மேல் காட்டும் அக்கறைகளை சிறிலங்கா அலட்சிப்படுத்துகிறது என்ற அரசியல் எதார்த்தத்தை இந்துப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. அதனை உறுதிசெய்யும் வகையில் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டாலே இந்தியாவில் தீர்மானங்களாகச் சிறிலங்கா ஏற்ற எதையும் நடைமுறைப்படுத்தும் என அனைத்துக்கட்சி மாநாட்டில் தெரிவித்த சிறிலங்கா ஜனாதிபதி எல்லாமே ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவானது என்ற நிபந்தனையையும் அறிவித்து 13ம் திருத்தத்தைத் தொடக்கப்புள்ளியாகக் கொண்டு முன்னேறுங்கள் என்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெயசங்கரின் கூற்றை அர்த்தமற்றதாக்கவும் செய்துள்ளார்.

அதேவேளை இவ்வாரத்தில் யப்பானிய வெளிவிவகார அமைச்சரின் சிறிலங்கா வருகை யப்பானை வடக்கில் பெருநில விவசாயத்துள் பங்கேற்க வைத்து சிறிலங்கா தனது தேவைகளுக்காகப் பயன்படுத்தும் உறவை வளர்ச்சி பெறவைக்கும் ரணிலின் திட்டமாகியுள்ளது. கூடவே ஆகஸ்ட் மாதத்தில் நேரடியாகச் சீனாவுக்குச் சென்று, சீனாவின் உலக வல்லாண்மை வளர்ச்சிக்குச் சிறிலங்கா எவ்வாறு பக்கத்துணையாக இந்தியாவைப் பொருட்படுத்தாமல் தொடரும் என்பதை உறுதிப்படுத்திச் சிறிலங்காவில் அதன் முதலீடுகளையும் சிறிலங்காவுக்கான அதன் உதவிகளையும் உறுதிப்படுத்தவுள்ளார். இந்த ராஜதந்திர விளையாட்டுத்தான் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் அறிவியல் வளர்ச்சி பெற்ற தகவல் சமுதாயமாக உள்ள இன்றைய உலகில் தரவுகளும் தகவல்களும் உடன் பரிமாறப்படும் நிலைகள் படுவேகமாக உள்ள சூழலிலும் ஈழத்தமிழர்களை இனத்துடைப்பு இனஅழிப்பு பண்பாட்டு இனஅழிப்புக்கு துணிந்து உள்ளாக்க வைக்கிறது. உலகநாடுகள் குறிப்பாக அமெரிக்கா சீனா ரஸ்யா பிரேசில் தென்னாபிரிக்கா என்பன பிரிக்ஸ் என்ற கூட்டொருங்கு கட்டமைப்பின் மூலம் தங்கள் நிதியியல் தன்னாட்சியை உலகநாடுகளிடை நிலைப்படுத்தி தங்களின் நாணயத்தில் இருதரப்பு வர்த்தகங்களையும் அனைத்துலக வர்த்தகங்களையும் முன்னெடுப்பதன் மூலம் டொலரே அனைத்துலக வர்த்தக இருப்புநிதியென்ற 1944 இல் பிரிட்டன்வுட்ஸ் அனைத்துலக நாணயநிதியத்தின் தோற்றம் முதலாக 79 ஆண்டுகள் தொடரும் நிலையை மாற்ற முயன்று வருகின்றன.

இதனால் அமெரிக்காவும் சீனாவும் இந்தியாவும் இலங்கையில் தங்கள் தங்கள் நாணயத்தில் சிறிலங்காவை அனைத்துலக வர்த்தகத்தை மேற்கொள்ளுமாறு செய்து தமக்கு வலிமை சேர்ப்பதற்கு போட்டியிடுகின்றன. கூடவே பசுபிக் இந்து மாக்கடல் பாதுகாப்புக்கும் இந்நாடுகளுக்குச் சிறிலங்காவுடன் தாங்களும் பங்காளர்களாக இருப்பது தவிர்க்க இயலாத தேவையாக உள்ளது. இதுதான் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையைச் சிறிலங்கா தீர்க்காது ஈழத்தமிழரின் இறைமையை மோசமாக்கி ஈழத்தமிழர்களின் தாயகத்தையும் ஈழத்தமிழர்களையும் இறைமை இழப்புக்கு மேலும் மேலும் உள்ளாக்கி தங்களின் அடிமைகளாக மாற்றச் சிறிலங்காவுக்கு உதவுகிறது.இதற்கு எதிர்வினை செய்வதாக இருந்தால் ஈழத்தமிழர்களின் நிதியியில் தன்னாட்சியை உலகத் தமிழர்களாக உள்ள ஈழத்தமிழர்கள் வலுப்படுத்திப் பலப்படுத்துவதன் மூலமே ஈழத்தமிழர்களின் இறைமையை முன்னெடுக்க முடியும். ஈழத்தமிழர்கள் தங்களுக்கான வங்கிக்கட்டமைப்பினை உருவாக்கி அதன்வழி தங்களின் உழைப்பின் நிதியாக்கத்தை கூட்டொருங்குப் படுத்தினால் நிச்சயம் ஈழத்தமிழர்களுடனும் தங்களின் நிதியியல் தன்னாட்சியை உறுதிப்படுத்த தங்கள் நாணயங்களில் வர்த்தகத்தை முன்னெடுக்கக் கூடிய உரையாடல்களை உலக நாடுகள் முன்னெடுப்பர். இதனை கவர்ச்சிப்படுத்தக் கூடிய முறையில் உலக ஈழத்தமிழர்களுக்கான வர்த்தகத்தை கூட்டொருங்குபடுத்தக் கூடிய ஈழத்தமிழர் உலக வர்த்தக பேரவையும் உலக ஈழத்தமிழர்களுக்கான சமுக பொருளாதார அரசியல் ஆன்மிகக் கொள்கைகளை பொதுமைப்படுத்தி ஈழத்தமிழர்களின் பலத்தையும் வளத்தையும் உலகுக்கு உணர்த்தி அவர்களின் தேவைகளை ஒரே குரலில் ஒரே அணியில் உலகின் முன்வைக்கக் கூடிய ஈழத்தமிழர் உலகப்பேரவையின் உருவாக்கலே சமகாலத்தின் தேவை என்பது இலக்கின் உறுதியான எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**

# இந்தியாவின் “பிடி” தளர்கின்றதா?

# தமிழ்க் கட்சிகளின் கையறு நிலை

அகிலன்

டில்வியில் வைத்து மறைமுகமாகத் தெரிவித்த செய்தியை கொழும்பில் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து நாடு திரும்பிய ரணில் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினார். “கட்சிகளுக்குள் இணக்கப்பாடு இல்லை. *13* க்கு எதிர்ப்புதான் அதிகமாகவுள்ளது” என்பதை டில்லிக்கு காட்டி பேச்சுவார்த்தைகளை காவரையறையின்றி ஒத்திவைப்பதுதான் அவரது உபாயம். அதேவேளையில், டில்லியால் எதிர்காலத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுக்க முடியாது என்பதும் இதன்மூலமாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன?




ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய மறுதினம் இந்தியாவின் செல்வாக்கு மிக்க பத்திரிகையான “த இந்து” ஆசிரியர் தலையங்கம் ஒன்றை வெளியிட்டிருந்தது. இராஜதந்திர மட்டத்தில் அதிகளவுக்குக் கவனத்தைப் பெற்ற ஒன்றாகவும், திரைமறைவில் என்ன நடைபெறுகின்றது என்பதை வெளிப்படுத்துவதாகவும் அது இருந்தது.

“இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்னை தொடர்பிலான அதன் வரலாற்று ரீதியான அக்கறைகளை இந்திய அரசாங்கம் கொண்டுவருவதை இனிமேலும் கொழும்பு வரவேற்கப்போவதில்லை என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு கூறும் மிகப்பெரிய செய்தி” என்பதுதான் இந்து பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் வெளிப்படுத்தியிருக்கும் முக்கியமான தகவல்!

“இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் கூட்டாக வெளியிடப்பட்ட ‘தொலை நோக்கு‘ அறிக்கையில் எதிர்காலத்துக்கான விரிவான திட்டங்கள் குறித்து விளக்கம் தரப்பட்டிருக்கின்றபோதிலும், விக்கிரமசிங்கவின் பயணத்தின் போது வெளியிடப்பட்ட எந்தவோர் எழுத்துமூல ஆவணத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு அரசமைப்பின் *13*ஆவது திருத்தத்தை மதிப்பதாக இலங்கையால் முன்னர் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் பற்றியோ அல்லது இந்திய மீனவர்கள் கைது செய்யபடுவது தொடர்பிலான பிரச்னை குறித்தோ எதுவும் கூறப்படவில்லை” என்றும் தி இந்து சுட்டிக்காட்டியிருந்தது.

பிரதமர் மோடி மாத்திரமே தனது உரையில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மாகாண சபை தேர்தல்களின் அவசியம் குறித்தும் இலங்கையின் தமிழ் சமூகத்தின் கௌரவமும் கண்ணியமும் கொண்ட வாழ்வை உறுதிப்படுத்த வேண்டிய தேவை குறித்தும் அழுத்தமான வேண்டுகேளை விடுக்க வேண்டியிருந்தது. தாங்கள் கொடுத்த கடிதத்தை பிரதமர் மோடி அவதானமாகப் படித்துள்ளார் என தமிழ்க் கட்சிகள் சில தமக்குத் தாமே பெருமைப்பட்டுக்கொண்டதையும் பத்திரிகை அறிக்கைகள் மூலமாக அறிய முடிந்தது.




விக்கிரமசிங்க டில்லியில் வெளியிட்ட கருத்துகளிலோ அல்லது கூட்டு அறிக்கையிலோ இந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதமையே இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் மூலமான மிகப்பெரிய செய்தியாக இருக்கக்கூடும். இதன்மூலம் தன்னுடைய நிலைப்பாடு இதுதான் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக உணர்த்தியிருக்கின்றார்.

புதுடில்லி மீது வேறு விவகாரங்களுக்காக இலங்கை தங்கியிருந்தாலும் கூட, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்னை தொடர்பான அதன் வரலாற்று ரீதியான அக்கறைகளை கொண்டு வருவதை இனிமேலும் இலங்கை விரும்பப்போவதில்லை என்பதுதான் இதன் மூலமாக உணர்த்தப்பட்டிருக்கிறது என்ற கருத்தை இந்து பத்திரிகை வெளியிடுவதற்கு இதுதான் காரணம்.

கொழும்பு திரும்பிய உடனடியாகவே அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டியமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தது. முதலாவது, இந்தியாவைப் பகைத்துக் கொள்வதற்கு ரணில் விரும்பவில்லை. அதனால் தான், நாடு திரும்பியவுடன் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றை நடத்துவதாக ஒரு நாடகத்தை அவர் நடத்தினார். அதாவது இந்தியப் பிரதமர் குறிப்பிட்டதைப் போல *13*ஐ நடைமுறைப்படுத்துவதற்கு தான் முயற்சிப்பாதாக அவர் காட்டிக்கொண்டார். இரண்டாவதாக, நாடாளுமன்றத்தில் இதற்கு ஆதரவில்லை, தமிழ்க் கட்சிகளும் இவ்விடயத்தில் ஒருமித்த கருத்தில் இல்லை என்ற கருத்தை ஏற்படுத்துவது அவரது நோக்கமாக இருந்துள்ளது. அதாவது, ரணில் தன்னை நியாயப்படுத்துவதற்கு வேண்டிய ஒரு கள நிலையை உருவாக்கியிருக்கின்றார்.

அதேவேளையில், ரணிலைப் பொறுத்த வரையில் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தி மீண்டும் ஒரு முறை நிறைவேற்றதிகாரத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதுதான் அவரது முதலாவது இலக்கு. தமிழ் மக்களின் ஆதரவும் அதற்கு அவசியம் என்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் *13*ஐ நடைமுறைப்படுத்த தான் தயார் என அவர் சொல்லிக்கொள்கின்றார். அதேவேளையில், நாடாளுமன்றத்தில் ஆதரவு இல்லாததுதான் தனக்குள்ள ஒரே பிரச்சினை எனக் காட்டிக்கொள்ள அவர் முறப்படுகின்றார்.

மறுபுறத்தில் சிங்கள மக்களின் ஆதரவும் ரணிலுக்கு மிக முக்கியம். *13* ஐ நடைமுறைப்படுத்த

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்



# 13ம் திருத்தம் – சமஷ்டியென்னும் அரசியல் பித்தலாட்டக்காரருக்குத் தவத்திரு முதுமுனைவர் தனிநாயக அடிகள் 80களிலேயே அளித்த பதில்

**அறிவார்ந்த பண்பாட்டு மீட்டுணர்வு இயக்கம் மூலம் தேச உருவாக்கம் செய்யப்பட்டாலே அரசியல் விடுதலை சாத்தியமென்பதே**

## உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் தோற்றக்காரணி

ஆசிரியரும் ஆய்வாளருமான **சூ.யோ. பற்றிமாகரன்**

பேரறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகள் ஈழத்தாய் ஈன்று புறந்தந்த உலகச் சான்றோன். 02.08.2023இல் அவரின் 110வது அகவைப் பெருநாள். 01.09.1980 இல் மரணமில்லாப் பெருவாழ்வில் அவர் ஈழத் தமிழர்களுடனும் தமிழகத் தமிழர்களுடனும் உலகத் தமிழர்களுடனும் அவர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பட்டாலும் அவரின் தெளிந்த சிந்தனைகள் இன்று தடுமாறும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு அரசியல் பித்தலாட்டம் தெளிவிக்கும் மருந்தாக முன்நிற்கின்றது.

1956ம் ஆண்டின் இலங்கையின் சிங்களம் மட்டும் சட்டம் அடிகளை வெகுவாகப் பாதித்ததின் பின்னரான அவரின் எழுத்துக்களில் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையின் அடிப்படையில் தாயகம் தேசியம் தன்னாட்சி உரிமைகளைப் பேணிய கூட்டாட்சியில் வாழ்வதற்காக உழைக்க வேண்டும் என்ற கருத்து அவரின் ஆரம்பக் கருத்தாக இருந்தது. இதனை “ நம் மொழியுரிமைகள் என்ற தனிநாயக அடிகளின் கருத்துக்களின் தொகுப்பாக 1956ஐ அடுத்து வெளிவந்த பத்துப்பக்கத் துண்டுப்பிரசுரத்தில் தமிழ் உரிமை குறித்த அவரின் ஆணித்தரமான கருத்துக்களில் தெளிவாகக் காணலாம்

‘அகிம்சை இணையில்லாத சக்தி வாய்ந்த ஆயுதம். அதுவே வீரர்களின் சின்னம். உண்மையில் அவர்களுடைய எல்லாமே அதுதான். கோழைக்கு எட்டவே எட்டாது அது.’ என அகிம்சையின் சிறப்பை வலிமையை வெளிப்படுத்தும் வரிகளுடன் தொடங்கிய “நம் மொழியுரிமைகள்” துண்டுப் பிரசுரம் அகிம்சையே ஒரே நடவடிக்கை முறை எனவும் அன்று வலியுறுத்தியது.

இதனை மனதிருத்த ஒரு சிறு உரையாடலை தனிநாயக அடிகள் பதிவு செய்தார். “ உங்கள் கருத்தின்படி அகிம்சை ஒரு நேரடி நடவடிக்கை முறையா? என்று டாக்டர் தர்மான், காந்தியிடம் கேட்டார். “அது ஒரு முறையல்ல. அது ஒன்றே முறை” என்றார் காந்திஜி.” என்பது தனிநாயக அடிகளால் மேற்கொள்ளப்பட்ட பதிவு.





இந்த உணர்வுடனேயே தனிநாயக அடிகள் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் அறவழிப்போராட்டங்களில் சிங்கள அரச பயங்கரவாதத்தால் குழப்பப்பட்ட 1956 காலிமுகத்திடல் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிரான சனநாயக அகிம்சைப்’ போராட்டம் முதல் 1960இல் ஈழத்தமிழர் தாயகத்தில் சிங்களப் பெரும்பான்மை ஒற்றை யாட்சிப் பாராளுமன்றத்தின் ஈழத்தமிழர் மேலான ஆட்சியையே மூன்று மாதங்கள் முடக்கி ஈழத்தமிழர்கள் தங்களுக்கான தபால் போக்குவரத்தைத் தமது அமைச்சு நிலை நிர்வாகத்திற்கான அடையாளமாகச் செயற்படுத்தித் தமக்கான நிதியினை வெளியிடும் நிலையை நெருங்கும் அளவுக்குச் சென்ற அகிம்சைப் ோராட்டம் சிங்களப் படைபல இனங்காணக் கூடிய அச்சத்தால் தலைவர்கள் கைதாக்கப்பட்டு மக்கள் தாக்கி உடல் ஊனமுறச் செய்யப்பட்டு குழப்பப்பட்ட அரசியல் உரிமைகளைக் கோரிய சனநாயக அகிம்சைப் போராட்டம் வரை அத்தனையிலும் தனிநாயக அடிகள் பங்கேற்று சொல்லேருழவராக மட்டும் நிற்காது செயலேருழவராகவும் செயற்திட்டங்களில் ஒவ்வொருவரும் பங்குபற்ற வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர் தனிநாயக அடிகள். கண்டறியப்பட்ட விளைவை நடைமுறைப்படுத்த உழைப்பதே பங்கெடுத்தல் என்பதை அடிகள் தெளிவாக வாழ்வால் உணர்த்தினார்.

இதனால் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிரான காலிமுகத்திடல் மைதானச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு ஏற்றது முதலே அடிகள் தொடர்ச்சியாகச் சிங்களப் புலனாய்வுத் துறையினரின் நெருக்குதல்களுக்கு உள்ளாகி, 1962இல் நாட்டை விட்டு வெளியேறி, மலேசியாப் பல்கலைகழகத்தில் கல்வித்துறையில் இணைந்தமை அவரின் வரலாறாகிறது. இதன் வழி புலம்பெயர் வாழ்வில் உல கெங்கும் 1983 கறுப்பு யூலை சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பு முதல் அரசியல் புகலிடம் கோரி வாழத் தொடங்கிய வரலாற்றின் முன்னோடியாக, அரசியல் புகலிடம் எனநேரடியாகக்கேட்டுவாழாவிட்டாலும்சொந்தத் தாய்மண்ணில் அமைதியான சனநாயக வழி அரசியல் பங்களிப்புக்காக தன் கல்விப்பணியைக் கிறிஸ்தவப்பணியைச் செய்ய இயலாத நிலையில் சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரால் அடிகள் இனங்காணக் கூடிய அச்சத்திற்கு உள்ளாக்கப்பட்டு புலம்பெயர்ந்து வாழும் வரலாற்றை அடைந்தார் என்பதே உண்மை. சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சியின் நோக்கு இனத்துடைப்பு என்பதையும் போக்கு படைபலம் மூலம் இனங்காணக் கூடிய அச்சத்தை ஏற்படுத்தல் என்பதையும் உலகுக்கு 1983க்கு முதலில் தெளிவாக்கிய சாட்சியாளர்களில் தனிநாயக அடிகளும் ஒருவர்.

இலங்கையில் அன்றைய சூழலில் கூட்டாட்சியை வலியுறுத்திய தனிநாயக அடிகள் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையின் வலிமையால் தம்முரிமைகளை நிலைநாட்டாவிடின் எதிர்காலத்தில் அவற்றைப் பெறப்போவதில்லை.” எனத் தன் அனுபவ மொழியாக மொழியுரிமையில் கூறிய வார்த்தைகள் இன்றும் தாயகத்திலும் புலத்திலும் வாழும் ஒவ்வொரு ஈழத்தமிழர்களும் மனதிருத்த வேண்டிய ஒன்றாக உள்ளது.

அத்துடன் தனிநாயக அடிகள் தமிழ் மொழி

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# வேகமாக மாறிவரும் உலக ஒழுங்கில் எமது நிலை என்ன?

— வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

உலகஒழுங்குமிகவேகமாகமாறிவருகின்றது. மூன்று வல்லரசுகளின் தலைமையில் அணிவகுக்கும் நாடுகளின் எண்ணிக்கைகள் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வருவது ஒருபுறம் இருக்க நாடுகளை தமது அணிக்குள் இழுக்கும் முயற்சிகளை இந்த 3 வல்லரசுகளும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. இந்த அணிகளை சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் இடைவிடாத சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

யப்பானின் வெளிவிவகார அமைச்சர் ஜொசிமாசா ஹயாசி ஆசிய மற்றும் ஆபிரிக்காவை சேர்ந்த 6 நாடுகளுக்கான சுற்றுப்பயணமாக இந்த வாரம் இந்தியாவுக்கு வந்த பின்னர் இலங்கை சென்றுள்ளார். அவருடன் வெளிவிவகார கொள்கைகளுக்கான இணைப்பாளர் உட்பட 22 அதிகாரிகள் கொண்ட குழுவினரும் சென்றுள்ளனர்.



தென்பசூபிக் சமுத்திரத்தில் பிரான்சின் ஆளுமையில் உள்ள நியூ கலடோனியா மற்றும் வனூற்று ஆகிய தீவுகளுக்கு சென்றுள்ள பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோன் தென்மேற்கு பசூபிக் சமுத்திரத்தில் உள்ள பப்புவா நியூகினிவுக்கு சென்ற பின்னர் இலங்கைக்கு கடந்த வெள்ளிக்கிழமை (28) சென்றுள்ளார். வெளிவிவகார அமைச்சர் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளுடன் வரும் மக்ரோன் உலகில் ஏற்பட்டுவரும் மாற்றம் மற்றும் சவால்கள் குறித்து இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேசவுள்ளார்.

சவுதி அரேபியாவுக்கு சென்று முடிக்குரிய இளவரசரை சந்தித்துள்ளார் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெட்டா.

வடகொரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செய்கூ அங்கு வடகொரிய அதிபரை சந்தித்ததுடன், புதிய ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளையும் பார்வையிட்டுள்ளார். ஆயுத அணிவகுப்பில் அமெரிக்காவின் 100 மில்லியன் டொலர்கள் பெறுமதியான எம்.கியூ-9 வகையை ஒத்த ஆளில்லாத உளவு மற்றும் தாக்குதல் விமானத்தின் அணிவகுப்பு பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. இந்த கூட்டத்தில் சீன அதிகாரிகள் பிரசன்னமாகி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் ரஸ்யாவில் ஆபிரிக்க மற்றும் ரஸ்யாவுக்கான கூட்டமைப்பு நாடுகளின் கூட்டத் தொடர்கடந்த 27-28 நாட்களில் இடம்பெற்றுள்ளது. 55 நாடுகளை கொண்ட ஆபிரிக்க அணியில் 17 நாடுகளின் தலைவர்களும், ஏனைய நாடுகளின் பிரதமர்கள் மற்றும் அமைச்சர்களும் பங்குபற்றி யிருந்தனர்.

ஆபிரிக்கா நாடுகளுக்கு தாம் வழங்கிய 20 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடன் களை தள்ளுபடி செய்யப்போவதாக தெரிவித் துள்ள ரஸ்யாவின் அதிபர் விளமிடீர் பூட்டீன், 25,000 தொடக்கம் 50,000 தொன்கள் வரையிலான தானியங்களை ஆபிரிக்க நாடுகளுக்கு இலவசமாக



வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். விநியோகமும் இலவசமாகவே செய்யப்போகின்றனர். அதற்கான மாற்றுவழிகள் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் ஆபிரிக்க நாடான நைகரில் இராணுவப் புரட்சி மூலம் கேணல் மேஜர் அமடு அப்த்தமனே ஆட்சியை கைப்பற்றியுள்ளார். பிரான்ஸின் முன்னாள் காலணித்துவ நாடான நைகரே இந்த பிராந்தியத்தில் மேற்குலக நாடுகள் தளம் அமைந்துள்ள இறுதி நாடாகும். அங்கு அமெரிக்கா இரண்டு ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தளத்தையும் 700 படையினரையும் கொண்டுள்ளது. மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 7 இராணுவப் புரட்சிகள் இடம்பெற்றுள்ளன. நைகரின் எல்லையில் உள்ள நாடுகளான மாலி மற்றும் பேர்கினா பசோ ஆகிய நாடுகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சியை தொடர்ந்து மாலியில் இருந்த பிரான்ஸ் நாட்டு படையினர் நைகருக்கு நகர்த்தப்பட்டிருந்தனர். தற்போது நைகரும் பறிபோயுள்ளது.

ரஸ்யாவின் கூலிப்படையினரான வக்னர் குழுவினர் ஆபிரிக்க நாடுகளில் செயற்பட்டு வருவது நாம் அறிந்ததே. இந்த புரட்சிகளின் பின்னனியில் அவர்கள் தான் இருப்பதாக நம்பப்படுகின்றது. புரட்சியாளர்களின் கைகளில் ரஸ்யாவின் கொடி உள்ளதையும் காண முடிகின்றது. எமது மக்களுக்கு நாம் அஞ்சலிகளை செலுத்த வேண்டும், அவர்கள் தொடர்ந்து போராடுகின்றனர். அவர்கள் மதிப்புக்குரியவர்கள், வெற்றி தான் எமது நோக்கம், தாயக விடுதலை இல்லையேல் மரணம் என ரஸ்யாவில் இடம்பெறும் கூட்டத்தில் பேசியுள்ளார் அண்மையில் படைத்துறை புரட்சி மூலம் பேர்கினா பசோவை கைப்பற்றிய படை அதிகாரியும் அரச தலைவருமான இப்ராஹீம் தரோ.




நாம் எமது இறைமைக்காக போராட வேண்டும், அதனை பாதுகாக்க வேண்டும். சரணடைவு என்ற வர்த்தைக்கு இடமில்லை. வேகமாக செல்ல வேண்டும் என்றால் தனியாக செல்லுங்கள், இல்லை அதிக தூரம் செல்ல வேண்டும் என்றால் இணைந்து பயணம் செய்யுங்கள் என இந்த கூட்டத்தில் பேசிய ரஸ்ய அதிபர் தெரிவித்துள்ளார்.

அதாவது மேலே காணப்படும் தகவல்களை பார்க்கும்போது பல்முனைவாக்கம் கொண்ட உலகம் ஒன்று வேகமாக உருப்பெற்று வருவது உறுதியாக தெரிகின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதில் ரஸ்யாவும், சீனாவும், அதனை முறியடிப்பதில் மேற்குலகமும் தீவிரமாக இயங்குகின்றன.

ஆனால் இதற்கு அப்பால் சென்று சுயாதீனமான வெளிவிவகாரக் கொள்கைகள் மற்றும் வல்லரசுகளை சாராது இறைமையுடன் இயங்குவதற்கும் பல நாடுகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தலைப்பட்டுள்ளன. யப்பானினதும், பிரான்ஸினதும் நகர்வுகள் அதனை தான் காட்டுகின்றன.

எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் படைத் தளமாக மாறும் என அமெரிக்காவின் William & Mary பல்கலைக்ககத்தை சேர்ந்த ஆய்வாளர் தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டையில் சீனா 2.19 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. அதாவது சீனா அதிக நிதி முதலீடு செய்த துறைமுகம் இதுவே.



அதாவது தற்போதைய பல்முனைவாக்கம் கொண்ட உலக ஒழுங்கு இலங்கையில் அதிகம் மையம் கொண்டுள்ளது. இந்திய பிரதமர் மோடியின் அமெரிக்க பயணமும், இலங்கை அதிபர் ரணிலின் இந்திய பயணமும் அதனை தான் கூறுகின்றன.

தற்போது மக்ரோனின் வரவின் பின்னனியும் அதுவே. அதாவது ஆபிரிக்காவை இழந்ததுபோல பசுபிக் பிராந்தியத்தை இழந்து வருவது போல ஆசியாவையும் இழக்க அவர்கள் விரும்பவில்லை. யப்பானுக்கு அண்மையான கடல் பகுதியில் ரஸ்யாவும், சீனாவும் கூட்டு படை ஒத்திகையை மேற்கொண்ட பின்னர் தற்போது பசூபிக் கடல் பகுதியில் இரு நாட்டு கடற்படையினரும் கூட்டு சுற்றுக்காவல் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

உலகில் உள்ள மூன்று பெரும் வல்லரசுகளில்இரண்டுகூட்டாகஇயங்குவதுமேற்குலகத்தின் நலன்களுக்கு அனுகூலமானதல்ல. எனவே தான் உக்ரைன் சமர் மூலம் ரஸ்யாவையும், தாய்வான் பிரச்சனை மூலம் சீனாவையும் பலவீனமாக்க மேற்குலகம் முயன்று வருகின்றது.

தென்னாசிய பிராந்தியத்திலும் இலங்கையின் ஊடாக சீனாவின் வழங்கல் பாதையை முறியடிக்க அவர்கள் முயல்கின்றனர். இதில் இந்தியா எந்த பக்கம் சேர்வது என்று தெரியாது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வடக்கு கிழக்கு இணையாத எந்த தீர்வினையும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

மட்டு.நகரான்

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு. வடகிழக்கு இணையாத எந்த தீர்வினையும் தமிழ் மக்கள் என்றும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது பொதுவாகவே நீண்டகாலமாக தமிழ் மக்கள் வலியுறுத்திவரும் விடயமாகும்.இந்த விடயத்திற்காக இந்த நாட்டில் தமிழ் மக்கள் கடந்த 75வருடங்களுக்கு மேலாக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடியதுடன் பல்வேறு இழப்புகளை சந்தித்தனர்.இன்று அதற்காக இராஜதந்திர ரீதியில் போராடிவருகின்றனர்.

கிழக்கு மாகாணம் என்பது தமிழர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். அதனை ஒருபோதும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்கமுடியாது. கிழக்கினை விட்டுக் கொடுத்தால் அது தமிழர்களுக்கான அழிவாக அமையும் என்று அன்று தேசிய தலைவர் முன்னெடுத்த சபதம் என்பதை யாரும் மறு தலித்து செல்லமுடியாது.


இவ்வாறான நிலையில் இன்று முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பது வடக்கு கிழக்கினை தனித்தனியாக பிரித்து மாகாண அதிகாரங்களை பகிர்வதற்கான நடவடிக்கைகள் என்பது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை வேரோடு அழிப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளதுடன் இந்த திட்டத்திற்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உள்ள அரசியல் சக்திகளும் துணைபோகின்றனவா என்ற சந்தேகம் இன்று பலமாக தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது.

இதன்காரணமாகவே அன்றுதமிழீழவிடுதலைப்புலிகள் வடகிழக்கு மாகாண சபையினை எதிர்த்து நின்றார்கள்.அன்று சிங்கள தேசம் மாகாணசபை முறைமையினைக்கொண்டு தமிழர்களை பிரித்து தமது பௌத்த பேரினவாத செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல முன்னெடுத்த முயற்சிகள் விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டதன் காரணமாகவே இன்று வடகிழக்கில் குறிப்பாக கிழக்கில் தமிழர்களின் இருப்பு ஓரளவாவது பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பதே உண்மையாகும்.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தினை திட்டமிட்டு பிரிப்பதற்கான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.இதன் ஒரு அங்கமாகவே கடந்தகாலத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தனது கருத்துகளில் எல்லாம் வடக்கினை மட்டும் முன்னிறுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டுவருகின்றார்.கிழக்கினை திட்டமிட்ட வகையில் பிரித்து வடக்கிற்கான அதிகாரம் வழங்கி தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்கிவிட்டோம் என்று சர்வதேசத்தினை ஏமாற்றலாம் என்ற நினைப்புடன் சிங்கள தேசம் தனது நகர்வுகளை முன் னெடுத்துவருகின்றது.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி கூட்டமும் இந்த ஏமாற்றுவேலையின் நாடகம் என்பதை அனைவரும் இலகுவில் புரிந்து கொள்ளமுடியும். உண்மையில் வடகிழக்கு தமிழர்களுக்கான தீர்வினை வழங்கவேண்டு மானால் தென்னிலங்கையில் உள்ள பெரும்பான்மை சக்திகளை சாந்தப்படுத்தவும் தேவை அரசாங்கத்திற்கு இருந்தாலும் அரசாங்கத்திற்கு வடகிழக்கு தமிழர்களுக்கான உண்மையான தீர்வினை வழங்கும் எண்ணம் இருக்கின்றதா என்பதை நாங்கள் ஆராயவேண்டும்.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் இன்று மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தப்பிப்பிழைத்து வருகின்றது.மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர்களின் பரம்பலே இன்று கிழக்கின் இருப்பினை பாதுகாத்து நிற்கின்றது. இவ்வாறான நிலையில் கிழக்கினை பாதுகாக்க வேண்டுமானால் மட்டக்களப்பு மாவட்டத்தினை பாதுகாக்க வேண்டியது மிக முக்கியமாகும்.




வடகிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் கிழக்கு மாகாணத்தினை கையாள வேண்டிய அதிகாரம் தமிழர்களிடம் இருக்க வேண்டும் என்பதை தமிழ் தேசிய பரப்பில் இருப்போர் சிந்திக்கவேண்டும்.இன்று உள்ள கிழக்கு மாகாணத்தின் அதிகாரங்களில் செல்வாக்கு செலுத்துவோர் மற்றும் இன்றைய நிலைமைகள் குறித்து சிந்திக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்படும் என்பதை விட 13வது திருத்த சட்டம் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் பகிரப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள விடயம் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கான தீர்வாக இருக்கமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

13வது திருத்த சட்டம் மூலத்தின் மூலம் காணி அதிகாரங்கள் உட்பட வழங்கப்படும் அதிகா ரங்கள் என்பது கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் தமிழ் மக்களின் இருப்புக்கு வைக்கப்படும் வேட்டாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் இலங்கை பிரித்தானியரிடமிருந்து அரசியல் விடுதலை பெற்ற பின்னர் உருவான இன அரசியலில் கிழக்கு மாகாணம் முக்கியமான ஒன்றாக இருந்து வருகின்றது. விடுதலைக்குப் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் நடைமுறைப் படுத்தப்பட்ட அரசுசார்புக் குடியேற்றத்திட்டங்கள், தமிழ்ப் பெரும்பான்மை மாகாணமாக இருந்து வந்த கிழக்கு மாகாணத்தின் இனப்பரம்பலில் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்குச் சார்பான நிலையைக் கொண்டுவர முயற்சிப்பதாகக் கூறித் தமிழ் மக்களிடையே அதிருப்தியைத் தோற்றுவித்தது. 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் கிழக்கு மாகாணத்தை, வட மாகாணத்துடன் தற்காலிகமாக இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை என்ற ஒரே மாகாணசபை நிவாகத்தின் கீழ் கொண்டு வந்தது. அத்துடன் இணைந்த மாகாணங்களின் நிர்வாக மையமும், கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலையிலேயே அமைக்கப்பட்டது. இந்தத் தற்காலிக இணைப்பு 2006 ஆம்ஆண்டு இலங்கை உச்சநீதிமன்றத்தினால் நீக்கப்பட்டு இரண்டு மாகாணங்களும் பிரிக்கப்பட்டன.



இந்த மாகாணம் தொடர்பில் தமிழர், சிங்களவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஒருபுறமிருக்க, நாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் முக்கிய பகுதியாகவும் கிழக்கு மாகாணம் காணப்படுவதன் காரணமாக தமிழர்கள் மத்தியில் முரண்பாடுகள் பல வகையிலும் தோற்றுவிக்கப்படுகின்றன.குறிப்பாக கிழக்கில் தமிழர்களின் ஆதிக்கம் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக கடந்த காலத்தில் பல்வேறு மோதல்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன.இந்த மோதல்கள் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் 18க்கும் மேற்பட்ட தமிழ் கிராமங்களிலிருந்து தமிழர்கள் அகற்றப்பட்டார்கள்.இவ்வாறு திருகோணமலை மாவட்டத்திலும் பல கிராமங்களிலிருந்து தமிழர்கள் அகற்றப்பட்டனர்.இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் மட்டுமே



தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கொடுப்பனவில் இழுபறி

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன பல தோட்டங்களில் முறையாக வழங்கப்படுவதில்லை என்று தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.இதன் காரணமாக இவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.இந்நிலை மிகவும் மோசமானதாகும்.தேயிலை பெருந்தோட்ட அபிவிருத்திக்கும் நாட்டின் தேசிய வருமான அதிகரிப்பிற்கும் தோள்கொடுத்த இம்மக்கள் தமது இறுதிக்காலத்தில் தமக்குரிய கொடுப்பனவுகளை உரியவாறு பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.இந்த முறையற்ற செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட்டு அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவுகளை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பெருந்தோட்ட மக்களின் சவால்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை தெரிந்த விடயமாகும்.இச்சவால்கள் பல்துறை சார்ந்ததாக அமைந்திருக்கின்றன. பொருளாதாரம், கல்வி, அரசியல், தொழில் நிலை என்று இச்சவால்கள் விரிந்து செல்கின்றன.இம்மக்களின் பொருளாதார நெருக்கடி சகலதுறைசார் பின்னடைவுகளுக்கும் உந்துசக்தியாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் இம்மக்களின் பொருளாதார பின்னடைவை நீக்கி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு விசேட உதவிகளை வழங்குவதில் இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகின்றது. இதேவேளை கல்வித்துறை பாகுபாடுகள் இம்மக்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகவும் விசனங்கள் இருந்து வருகின்றன.ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பகிர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகமான அதிருப்திகள் நிலவுகின்றன. சமூக அபிவிருத்தியில் அரசியலின் வகிபாகம் அதிகமாகும்.ஆக்கபூர்வமான அரசியல் பிரதிநிதித்துவம் சமூக மறுமலர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும் என்பதை யும் மறுப்பதற்கில்லை.இத்தகைய ஆக்கப்பூர்வமான அரசியல் பிரதிநிதித்துவத்தின் காரணமாக பல பின்தங்கிய சமூகங்கள் முன்னிலைக்கு வந்துள்ளன.இந்நிலையில் இம்மக்களின் சனத்தொகைக்கேற்ப அரசியல் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் இது இம்மக்களின் அபிவிருத்திக்கு குந்தகமாக இருந்து வருவதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.மேலும் இச்சமூக இளைஞர்கள் பலர் தொழில் வாய்ப்பின்றி காணப்படுகின்ற நிலையில் தொழில்துறை நகர்வுகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமெனவும், தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.ஏற்கனவே பெருந்தோட்ட இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தோட்டத் துறை சார்ந்த தொழில்களும் தற்போது இழுபறி நிலையில் உள்ளன.




இத்தகைய பல சவால்களுக்கு மத்தியில் பெருந்தோட்டங்களின் உயிர்வாழ்விற்கு தன்னையே அர்ப்பணித்த தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வுபெறும் வேளையில் அம்மக்களுக்கு உரித்தாகும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் தற்போது இழுபறி நிலைகள் மேலெழுந்துள்ளன.1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும்.1958 ம் வருடத்திற்கு முன்பு தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஊழியருக்கு நிதி சார்ந்த நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒழுங்கு முறையான திட்டம் காணப்படவில்லை.இதனால் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை தொழிலுக்காக அர்ப்பணிப்பு செய்த தொழிலாளர்கள் பிற்காலத்தில் பல்வேறு இன்னல்களையும் அனுபவிக்க நேர்ந்தது.இந்நிலையில் ஊழியர் சேமலாப நிதியமானது தொழில் தருநர், தொழில் புரிவோர் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையேயான கூட்டுறவினால் தொழில் புரிவோருடைய எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள நிதியமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.அரசாங்கத்தில் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு உரித்துகள் பெறாத எந்தவொரு ஊழியரும் ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுவார்.ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு முழுமையாக தொழில்தருநரின் பொறுப்பாக இருந்த போதிலும் அது சரியாக செய்யப்படாவிட்டால் அதுபற்றி தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் ஊழியருடைய பொறுப்பாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர்.

### ஊழியர் நம்பிக்கை நிதியம்

இதேவேளை ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளைப் பெறுவதில் உள்ள சிரமங்களை நீக்குவதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியச்சட்டம் 1980 ம் வருடத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளுக்கு மேலாக, ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து நன்மைகளை துரிதமாக பெற்றுக் கொள்ள முடியும்.யாராவதொரு ஊழியரின் சேவைக் காலம் முடிவுறும்போது அல்லது திடீர் விபத்து அல்லது சுகவீனம் காரணமான நிலைமைகள் காரணமாக தொடர்ந்தும் சேவையாற்ற முடியாதவிடத்து ஊழியர் நம்பிக்கை நிதியத்திடமிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.இதற்காக வயதெல்லை நிர்ணயிக்கப்படவில்லை. ஊழியர் ஒருவர் அகால மரணமடைவாராயின் அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது அப்படியான ஒருவர் இல்லாதவிடத்து மரணமடைந்தவரின் உரிமைக்காரருக்கு நன்மைகள் பெற்றுக் கொடுக்கப்படும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு சரியான முறையில் சந்தாப்பணம் செலுத்தப்படுகின்றதா? என்று பரீட்சித்து பார்ப்பதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள்.சரியான முறையில் சந்தாப்பணம் செலுத்தாத தொழில் தருநர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்றை தொடுப்பதற்கு இந்த உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் உள்ளதையும் குறிப்பிட்டாதல் வேண்டும்.

இந்தவகையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன தொழிலாளர்களின் உயிர் மூச்சைப் போன்றதாகும்.அவர்கள் இறுதிக்காலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கு இந்நிதிகள் தோள் கொடுக்கின்றன. பிறரிடம் கையேந்தி, அவர்களில் தங்கி வாழும் நிலைக்கும் இவை முற்றுப்புள்ளி வைக்கின்றன. இந்நிலையில் தொழிலாளர்கள் ஓய்வுபெறும் தருவாயில் இந்நிதிகளை முறைப் படி அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பது அவசியமாகும்.

எனினும் இந்நடவடிக்கை உரியவாறு இடம்பெறுகின்றதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதில் பல குளறுபடிகள் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்படுகின்றது. 450க்கும் அதிகமான பெருந்தோட்டங்களை பிராந்திய கம்பனிகள் நிர்வகித்து வருகின்றன. இதே வேளை இன்னும் சில தோட்டங்களை அரசாங்க நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை,அரச பெருந்தோட்ட யாக்கம் போன்றன நிர்வகிக்கின்றன. இத்தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைகாலப்பணம் என்பன சுமார் 1800 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக கடந்தகால அறிக்கையொன்று வலியுறுத்துகின்றது. சுமார் 7000 தொடக்கம் 10000 தொழிலாளர்கள் இதனால் பாதிப்பை எதிர்நோக்கி இருந்தனர். மேற்படி தோட்டங்களில் பல கண்டி, மாத்தளை மாவட்டங்களிலேயே அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இத்தகைய சில தோட்டங்களில் தொழிலாளர்களிடம் அறவிடப்பட்ட தொகை மத்திய வங்கியில் உரிய வாறு வைப்பில் இடப்படவில்லை என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.உரிய கொடுப் பனவுகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் சில தொழிலாளர்கள் உயிரிழந்த கொடூரமும் இடம்பெற்றுள்ளமை வேதனைக்குரியது.

இந்நிலையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தோட்டங்களிலுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கான உரிமை பாதிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் மலையக அரசியல்வாதிகள் இது குறித்து கவனமெடுத்து அமைச்சரவை ஊடாக அழுத்தம் கொடுத்து ஒரு சாத்தியமான தீர்மானத்திற்கு வருவதே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கான உரிமையை உறுதிசெய்வதற்கு சிறந்த வழியாகும் என்ற

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மாண்பழித்த மணிப்பூரரசு

முனைவர் **ஆகு**–சென்னை

## இறுதிப் பாகம்

### அரச வன்முறை

அதிகார வெறியும், வகுப்புவாத கொள்கையும், சமயச்சார்பும் தனது உயிர் மூச்சாக கொண்டு செயற்படும் பாசக அரசுதான் இந்தக் கலவரத்துக்கும், கொலைக்கும், தீ வைத்ததற்கும் முழுமுதற் காரணமாக இருக்கிறது. சமவெளியில் வாழும் மெய்தேய் இனக்குழுவின் இந்து மக்களுக்கு கைகூலியாக வேலைசெய்கிறது. பழங்குடியினராக வாழாத மெய்தேய் மக்களை பழங்குடி பட்டியலில் சேர்த்து, பழங்குடி மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் பறித்து பெரும்பான்மையான, மேட்டுக்குடியினரான மெய்தேய் மக்களுக்கு கொடுத்து, உண்மையான பழங்குடியினரை ஒடுக்குவதுதான் ஆளும் பாசகவின் அரசியல் திட்டமாகும்.



2017 ஆம் ஆண்டு மணிப்பூர் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற மெய்தேய் மக்களின் கோரிக்கை நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி கொடுத்து தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியை அமைத்தது. இன்று மணிப்பூர் சட்டமன்றத்தில் 60 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 40 உறுப்பினர்கள் பெரும்பான்மையான மெய்தேய் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள். அதனால் இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றி அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள பாசக அரசு வன்முறையை கையாளுகிறது. தேர்தல் அரசியல் ஆதாயத்திற்காக பழங்குடியினராக இல்லாத மக்களை பழங்குடியினராக மாற்றுவது பாசகவின் சந்தர்ப்பவாத அரசியலாகும். மக்கள் மடிந்தால் பரவாயில்லை. வன்முறை நடந்தாலும் பரவாயில்லை. ஆனால் பாசக அரசு அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களது நோக்கமாகும்.

வகுப்புவாத ஆர்எஸ்எஸ் அமைப்பும் பாசகவும் மெய்தேய் இனக்குழுவை தங்களது அரசியல் திட்டத்தை மாநிலத்தில் நிறைவேற்ற பயன்படுத்துகின்றன. இந்த அமைப்புகளின் அடிப்படைவாத இந்துத்துவா கருத்தியல் தான் கலவரத்திற்கு காரணமாக அமைகிறது. ஆளும் பாசக அரசின் பாதுகாப்புடன் இந்துத்துவா மெய்தேய் மக்கள் 290 பழங்குடி கிறித்தவர்களின் கோவில்களைத் தாக்கி, 3 கோவில்களை திட்டமிட்டு எரித்து சாம்பலாக்கினர் என்று சுரசந்த்பூர் மாவட்டத்தில் செயல்படும் மாவட்ட கிறித்தவ நல்லெண்ண அமைப்பு 16. 05. 23 அன்று தனது ஆய்வறிக்கையில் வெளியிட்டது.

2017 ல் ஆட்சிக்கு வந்த பிறகு பாசக மெய்தேய் மக்களுக்கு இந்து என்ற சமயத்தை தேசிய அடையாளத்தை கொடுத்தனர். ஆனால் இதில் 10 விழுக்காடு மெய்தேய் இனக்குழு மக்கள் சனமகிசம் என்ற தொல்குடி சமயத்தை பின்பற்றுகின்றனர்.



குகி மக்கள் மணிப்பூரின் குடிமக்கள் அல்லர் என்ற பொய்யை ஆளும் மெய்தேய் மக்களில் சிலர் பரப்புகின்றனர். குகிமக்கள் மியான்மியரிலிருந்தும் வங்கதேசத்திலிருந்தும் வந்த கிறித்தவர்கள் என்று சமய வெறுப்பை ஆளும் அரசோடு சேர்ந்து பரப்பி அவர்களை தாக்குகின்றனர். கிறித்தவ சமயத்தை தழுவிய இயேசு அவையினரையும் அவர்களது வாகனத்தையும் தாக்கி, எரித்தனர். 3000 தமிழர்கள் வாழும் மோரே மாவட்டத்தில் எண்ணெய் கிணறுகள் இருப்பதாக கண்டறிந்து, தமிழர்களை தாக்கி அரசு அப்புறப்படுத்துகிறது. இதுவரை 25 தமிழர்களின் வீடுகளையும் கடைகளையும் அரசு குண்டர்கள் தீக்கிரையாக்கினர். இந்துத்துவா வன்முறையாளர்களுக்கு ஆளும் பாசக அரசு பாதுகாப்பும் ஆயுதங்களையும் கொடுத்து உதவுகின்றது.



பழங்குடியினர் வாழும் மலைகளில் காடுகளில் போதைப் பொருட்கள் விற்கப்படுகின்றன என்றும், கிளர்ச்சியாளர்கள் இங்கு தஞ்மடைந்துள்ளனர் என்றும் ஆளும் அரசே பொய்களைப் பரப்பி, இராணுவத்தை வைத்து பழங்குடியினரை துன்புறுத்துகின்றனர். பழங்குடியினர் அமைதியாக கடந்த மார்ச் 10 ஆம் நாள் ஊர்வலம் நடத்த அனுமதி கொடுத்த சுரசந்த்பூர் மாவட்ட காவல்துறை ஆய்வாளரை வகுப்புவாத அரசு இடம் மாற்றம் செய்தது. ஆளும் பாசக அரசுக்கு எதிராக பழங்குடியினர் எழுதினால் அல்லது பேசினால் உடனே கைதுசெய்து சிறையில் அடைப்பர். ஆனால் வன்முறை செய்யும் மெய்தேய் மக்களுக்கு பாசக அரசு உதவி செய்கிறது என்று ஆளும் பாசக சட்டமன்ற உறுப்பினர் திருமிகு பவோலியென்லால் கவோகிப் கூறுகிறார்.

### தற்போதைய நிலை

**ஒன்று.** மணிப்பூரில் உள்ள 16 மாவட்டங்களில் 144 தடைச் சட்டம் போடப்பட்டுள்ளது. **இரண்டு**. ஊடகவியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் வரவிடாமல் தடுக்க, கொல்கொத்தாவிலிருந்து இம்பாலுக்கு செல்ல வானூர்தியில் பயணக்கட்டணம் 30, 000 முதல் 80, 000 வரை உயர்த்தினர். உள்நாட்டு, பன்னாட்டு மனித உரிமை காப்பாளர்களுக்கு மணிப்பூர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. எடு. அமெரிக்க ஒன்றிய சமய சுதந்திரம் என்ற அமைப்பின் தலைசரான இராபர்ட் ஜார்ஜ் என்பவருக்கும் தந்தை இரீசே என்பவருக்கும் இந்திய ஒன்றிய அரசு மணிப்பூர் செல்ல 10. 07. 2023 அன்றுஅனுமதி மறுத்தது. **மூன்று**. இன்று வரை இணையதளம் முடக்கப்பட்டுள்ளது. **நான்கு.** ஒன்றிய பாதுகாப்பு படையினர்(சிஆர்பிஎப், பிஎஸ்எப்), காவல் துறையினர், இராணுவம், உளவுத்துறை இங்கு அதிகமாக குவிக்கப்பட்டுள்ளன. **ஐந்து.** அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 355 அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த உறுப்பு உள்நாட்டில் எழும் வன்முறையை தடுக்க ஒன்றிய அரசுக்கு முழு அதிகாரம் தருகிறது.



**ஆறு.** சட்ட ஒழுங்கை மேற்பார்வையிட உளவுத்துறை காவல்துறை தலைமை இயக்குனர் அசுதோசு சின்காவை ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது. **ஏழு.** ஆளும் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் வுங்காசின் வால்டே ஆளும் கட்சி குண்டர்களால் தாக்கப்பட்டார். பழியை பழங்குடி மக்கள்மீது போட்டனர். **எட்டு.** கலவரத்தில் ஈடுபடுவோரை உடனடியாக சுட இராணுவத்திற்கும், காவல் துறைக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. **ஒன்பது.** மக்கள் கூட்டமாக கூட தடை போடப்பட்டுள்ளது. **பத்து.** மணிப்பூர் ஆளுநர் இல. கணேசன் நாக லாந்துக்கு மாற்றப்பட்டார். சிக்கிம் ஆளுநர் கங்காதர் பிரசாத் மணிப்பூர் ஆளுநராக கூடுதல் பொறுப்பை பெற்றுள்ளார். **பதினொன்று.** மணிப் பூரில் அனைத்து தொடர்வண்டிகளும் நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. **பன்னிரெண்டு.** 3000 வீடுகள் சிதைத்து, இடித்து, எரித்து அழிக்கப்பட்டன. ஏறக்குறைய 234 பேர் இறந்தனர். 500 பேர் காயமடைந்தனர். 50, 000 பழங்குடி மக்கள் இடம் பெயர்க்கப்பட்டு மறுவாழ்வு முகாம்களில் வாழ்கின்றனர் என்று மாவட்ட கிறித்தவ நல்லெண்ண அமைப்பும், 45, 000 மறுவாழ்வு முகாம்களில் வாழ்கின்றனர் என்று இம்பால் கத்தோலிக்க பேராயர் தோமினிக் இலூமனும் தங்களது ஆய்வறிக்கையில் கூறுகின்றனர். தொடர்ந்து பழங்குடி மக்கள் கொல்லப்படுகின்றனர். **பதிமூன்று.** குமுக ஆர்வலர்கள், மனித உரிமை காப்பாளர்கள், அமைப்புகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, சித்திரவதைசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மெய்தேய் மக்களையும் குகி மக்களையும் சந்தித்துவிட்டு “இது அரசு நத்திய கலவரம்” அல்லது “அரச பயங்கரவாதம்” என்று தங்களது அறிக்கையில் தெரிவித்த இந்திய பெண்களின் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த திருமிகு ஆனி ராசா, நிசா சிந்து, தீக்சா துய்வேதி ஆகியோர்மீது 08.07.2023 அன்று இம்பால் காவல்துறையால் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இறுதிப் பாகம்

# “ஒன்றில் ஐரோப்பாவைச் சென்றடைகிறோம் அல்லது சாவைத் தழுவுகிறோம்”

# ஆபத்துநிறைந்த கடலைக் கடக்க முயலும் பதின்மவயது இளையோர்கள்



தமிழில்: **ஜெயந்திரன்**

மத்தியதரைக்கடலைக் கடப்பதற்குத் தேவையான நிதியைச் சேகரித்த பின்னர் தங்கள் பயணத்துக்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு முகவர்களை இந்த இளையோர் நாடினார்கள்.

“இந்த முகவர்கள் சொல்வதில் தனக்கு நம்பிக்கை இல்லை” என்று சூமா சொல்கிறார். “அவர்கள் எங்களுக்கு ஒன்றைச் சொல்வார்கள். அதற்குப்பின்னர் பொதுவாக, சொன்னதற்கு முற்றிலும் மாறாக வேறு ஒன்றைச் செய்வார்கள்.”

ஒரு படகில் 55-60 பேருடன் தன்னை அனுப்பி வைப்பார்கள் என்று எனக்கு முதலில் சொன்னார்கள். ஆனால் கடைசியில் ஒரு றப்பர் மிதவையில் 80-90 பயணிகளுடன் அனுப்பிவைத்தார்கள்.



“கடவுளிலே எங்களது முழு நம்பிக்கையையும் வைத்துவிட்டுத் தான் இந்தப் பயணத்தை நாம் மேற்கொள்ளுகிறோம். அந்த றப்பர் மிதவையில் தான் எல்லோரும் பயணிக்க வேண்டியிருக்கிறது.”

125 பயணிகளுடன் புறப்பட்டுப் பின்னர் கடலில் மூழ்கிய ஒரு படகில் தான் இருந்ததாக, அடாமா தெரிவித்தார். உயிர்தப்பிய 94 பயணிகளில் அவரும் ஒருவர்.


“எனது நண்பன் கடலில் மூழ்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்களுக்கு உதவி செய்தேன். ஆனால் எல்லோருக்கும் என்னால் உதவிசெய்ய முடியவில்லை. அவர்கள் கடலில் அடித்துச்செல்லப்படுவதைப் பார்க்க வேண்டியிருந்தது.”

இத்தாலியக் கரையோரத்தை நாம் நெருங்கிய வேளையில், ஓஷன் வைக்கிங் (Ocean Viking) கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்த இளையோர்கள் நடுவில் நம்பிக்கைக் கீற்றுகளைப் பார்க்க முடிந்தது. அதே நேரம் சிலரது முகங்களில் கவலையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. “வீட்டை விட்டுப்பிரிந்து இருப்பது கவலைக்குரியது. ஆனால் உறவுகளிடமிருந்து நிறையப் பணத்தைக் கடன்வாங்கிய பின்னர் மீண்டும் அங்கு திரும்புவது வெட்கத்துக்குரியதாகும்.” “அது அவமானத்துக்கு உரியதாகும்.”

‘ஐரோப்பாவுக்குப் போகிறோம்’ என்பதைத் தவிர அவர்களது ஆபத்தான பயணம் தொடர்பாக அவர்களில் பலர் எதுவுமே அறிந்திருக்கவில்லை. மற்றவர்களோ இத்தாலியக் கடற்கரை நகரமான லம்பதுசா வுக்கு (Lampedusa) தாங்கள் போய்ச்சேர இருப்பதை எண்ணிக்கொண்டிருந்தார்கள். குடிபெயர்வாளர்கள் பொதுவாக இந்தத் துறைமுகத்தையே சென்றடைகிறார்கள்.

தமது பயணத்தின் இடையில் எஸ்ஓஎஸ் மெடிற்றானே (SOS Meditaranee) என்ற அமைப்புக்குச் சொந்தமான ஓஷன் வைக்கிங் என்ற கப்பல் தங்கள் பயணத்தின் இடைநடுவில் தங்களைப் பாதுகாத்துத் தங்களைக் கரைக்குக் கொண்டுசேர்க்கும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருந்ததாக கப்பலில் பயணித்த இளையோர்கள் பலர் என்னிடம் கூறினார்கள். தமது ஆபத்தான பயணத்தை இத்தாலி வரை தொடரவேண்டி இருக்காது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

தனது பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் தனது அலைபேசியின் துணையுடன் குறிப்பிட்ட கப்பலின் பயணத்தைப் பின்தொடர்ந்ததாக ஒரு பதின்ம வயது இளைஞன் என்னிடம் தெரிவித்தார். “சமூக வலைத்தளத்தில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. கப்பல்களின் பயணங்களைக் காட்டக்கூடிய செயலிகள் கூட எனது அலைபேசியில் இருக்கின்றன. காலநிலை, பயணிகளை மீட்கும் கப்பல்கள் போன்றவற்றின் செயற்பாடுகளை என்னால் பின்தொட முடியும்.”



இவ்வாறான ஒரு ஆபத்தான பயணத்தை மேற்கொள்வதற்கு இவ்வகையான மீட்புக் கப்பல்கள் குடியேறிகளைத் தூண்டுவதாக எஸ்ஓஎஸ் மெடிற்றரானேயின் செயற்பாடுகளை விமர்சிப்போர் தெரிவிக்கிறார்கள்.

இது எவ்வாறிருப்பினும் தாங்கள் ரோந்து சென்றாலென்ன செல்லாவிட்டாலென்ன, குடியேறிகள் இந்தப் பயணங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதாக அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

கப்பல்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மக்கள் இந்தப் பயணங்களை மேற்கொள்ளவே செய்கிறார்கள் என்று கப்பலில், தொலைத் தொடர்புகளுக்குப் பொறுப்பான கிளேயர் ஜூஷற் (Claire Juchat) தெரிவித்தார்.

இந்தப் பதின்மவயது இளையோரை மீட்ட 72 மணித்தியாலங்களில் 5000 குடியேறிகள் லம்பெதுசா தீவுக்கு வந்துசேர்ந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட நாடுகளின் அதிகாரிகளினாலேயே, மீட்புப் பணிகளில் பெரும்பாலானவை மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் (United Nations Refugee Agency) தகவலின் அடிப்படையில், இதுவரை 64,000 குடியேறிகள் மத்திய தரைக்கடலின் மத்திய பகுதியை இந்த ஆண்டில் இதுவரை கடந்திருப்பதாக அறியமுடிகிறது. அவர்களில் கிட்டத்தட்ட 1000 குடியேறிகள் ஆபிரிக்காவின் காம்பியா (Gambia) நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஐரோப்பா ஒரு பாதுகாப்பான, உறுதியான பிரதேசம் என்றும் அங்கே தாங்கள் ஒழுங்கான கல்வியையும் நல்ல வேலையையும் பெற்றுக்கொள்ளலாம் என்று இந்தப் பதின்மவயதுடையோர் எனக்குச் சொல்கிறார்கள்.

கப்பல் பயணத்தின் போது, கப்பல் பணியாளர்கள் இத்தாலி மொழியில் அடிப்படை விடயங்களைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்த இளைஞர்களோ அவற்றை ஆர்வமாகச் செவிமடுத்து, குறிப்பெடுத்து அந்தச் சொற்களையும் வசனங்களையும் சொல்லிப் பயிற்சி செய்கிறார்கள்.

இவர்களில் சிலரைப் பொறுத்தவரையில் ஐரோப்பாவை வெற்றிகரமாகச் சென்றடைந்த தமது நண்பர்கள் மூலம் தாம் சந்திக்கப் போகின்ற புதிய வாழ்க்கையில் தாங்கள் எதனைச் சந்திக்க இருக்கிறார்கள் என்பதை அறிந்திருக்கிறார்கள். அதே நேரம், பெரும்பாலான இளையோருக்கு, அது ஒரு புதிராகவே இருக்கிறது. ஐரோப்பாவைப் பற்றி அவர்கள் அதிகமாக அறிந்துவைத்திருப்பது தமக்கு மிகவும் விருப்பமான உதைபந்துக் குழுக்களைப் பற்றியும் உதைபந்தாட்ட வீரர்களைப் பற்றியும் தான்.



“றொனால்டோவைப் போல நான் ஒரு உதைபந்தாட்ட வீரனாக வரவிரும்புகிறேன்” என்று ஒருவர் சொல்கிறார். “மார்க்கஸ் றாஷ்போட்டைப் போல நான்” என்று இன்னொருவர் சொல்கிறார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## ஒன்றில் ஐரோப் ... தொடர்ச்சி ...

தொடர் 'ஆ' வை வென்ற இத்தாலியையும் அதன் புதிய வெற்றியாளர்களான நாப்பொலியையும் சென்றடைய இருப்பது தொடர்பாக அவர்களிடத்திலே பரபரப்பான உற்சாகம் இருப்பது தென்படுகிறது.

இருப்பினும் அவர்களது எதிர்காலம் நிச்சயமற்றதாகவே இருக்கிறது.

கப்பல் கடைசியாக பாறியின் *(Bari)* துறைமுகத்தில் நங்கூரமிட்ட பொழுது, முன்னர் ஆடிப்பாடிக் கொண்டிருந்த இளையோர்கள் அனைவரும் இப்போது எந்தவிதமான பேச்சும் இன்றி மௌனமாகின்றனர். மண்ணிறத்தில் உள்ள கம்பளிப் பேர்வையையும் அதிகாரிகளிடம் காண்பிக்க தாம் வைத்திருக்கும் ஆவணங்களையும் அவர்கள் இறுகப்பற்றிக்கொள்கின்றனர்.

அதிகாரிகளினால் அழைக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் அந்த நேரத்தில், அவர்களில் ஒருசிலர் பதற்றமாக இருக்கின்றனர். சுகாதாரம் மற்றும் எல்லைப்பாதுகாப்பு என்பவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் அவர்களை வரவேற்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் பணியாளர்களும் அங்கே அவர்களை வரவேற்கக் காத்திருக்கின்றனர். சிகிச்சைகளுக்காக சிலர் சிறுவர்களுக்கான மருத்துவ ஊர்திகளில் ஏற்றப்படுகின்றனர். ஏனையோர் பெரிய வாகனங்களில் ஏற்றப்பட்டு குடியேறிகளை முதற்கட்டமாக ஏற்றுக்கொள்ளும் வரவேற்பு மையங்களுக்கு கொண்டுசெல்லப்படுகின்றனர். அங்கே மேலதிக மதிப்பீடுகள் அவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும்.

"ஒவ்வொருவரதும் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தே ஐரோப்பாவில் தங்குவதற்கான அவர்களது உரிமை பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும். அவர்களது சொந்த நாட்டில் போர் நடைபெறாவிட்டாலும், வேறு ஏதாவது காரணத்தின் நிமித்தம் அவர்கள் பாதுகாப்புக்குரியவர்கள் என்ற இறுதி முடிவு எடுக்கப்படலாம்" என்றுசெஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை ஆகியவற்றை உள்ளடக்கிய பன்னாட்டுக் கூட்டமைப்பின் செயற்பாட்டு மேலாளராகக் குறிப்பிட கப்பலில் பணியாற்றுகின்ற சாறா மஞ்சினெல்லி *(Sar Mancinelli)* கூறினார்.

அண்மைக்காலத்தில் குடியேறிகளின் வரவு வழமையை விட மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பெற்றோரின் துணையின்றி அங்கு வரும் சிறுவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு ஏற்ற வசதிகளை அங்குள்ள வரவேற்பு மையங்கள் கொண்டிருக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் இத்தாலிக்கான பிரதிநிதியாகப் பணியாற்றுகின்ற கியாறா கார்டொலெத்தி *(Chiara Cardoletti)* கருத்துத் தெரிவித்தார்.

ஐரோப்பிய மண்ணில் தனது முதல் அடியை எடுத்து வைக்க முன்னர், சூமா திரும்பி எங்களைப் பார்த்துப் பிரியாவிடை சொல்கிறார்.

**நன்றி: பிபிசி**

## 13ம் திருத்தம் ... தொடர்ச்சி ...

உரிமைகளைப் பெறும் இயக்கங்கள் நம்மொழியுரிமைகள் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்ட 1960 வரை வெற்றி பெறாததிற்குக் காரணம் தமிழ் மக்களின் உணர்ச்சியின்மை என்றே அடித்துக் கூறினார். இன்றும் அது உண்மையே. "ஒவ்வொரு தனிமகனுக்கும் தனி ஆற்றலுண்டு. உனக்குத் தமிழ் உணர்ச்சியில்லையெனில் நீ தமிழ் உரிமைகளைப் பெற முயலும் இயக்கங்களுக்கு இடையூறாக இருக்கின்றாய். இன்றே உன் உரிமைகளைப் பற்றியுணர்ந்து உன்னால் இயன்றவரை அதனை அடைய ஒத்துழை" என தனிநாயக அடிகள் அறைகூவல் விடுத்தார்.

ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற முறையில் மண் மீட்புக்கும் மக்கள் பாதுகாப்புக்கும் பங்களிப்பதற்கான தனிப்பட்டவர் களுக்கான பாதை வரைபையும் தனிநாயகஅடிகளே அமைத்துத் தந்தார். ஒவ்வொரு காலையும் "இன்று தமிழுரிமை வெற்றிக்கு என்ன செய்யப் போகின்றேன்", என்றும் மாலை "தமிழ் உரிமை வெற்றிக்கு இன்று நான் என்ன செய்தேன்" என்றும் உன் நெஞ்சினைக் கேள். அதனை எழுத்தில் பதிவு செய். செய்த செயலை மேலும் முன்னெடுக்கத் திட்டமிடு. செய்யாமல் விட்டதற்கு அல்லது செய்ய இயலாமல் போனதற்கான காரணத்தைச் சிந்தித்து அதனை மாற்று " என்பது அடிகளின் ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புடன் கூடிய தன்னாட்சிக்கான பாதைவரைபாக அமைகிறது.

ஈழத்தமிழர் இறைமை மீட்பு, ஈழத்தமிழர்களின் தொன்மையையும் தொடர்ச்சியையும் அறிவார்ந்த முறையிலான ஆய்வியல் அணுகுமுறையின் வழியாக மீள்வாசிப்புச் செய்யும் இயக்கத்தின் மூலமே உலகிற்குத் தெளிவாக்கப்பட்டு அவர்களின் வெளியகத்தன்னாட்சி உரிமை தெளிவாக்கப்படுவதில்தான் ஈழத்தமிழர்களின் பிரிக்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்களின் அரசியல் எதிர்காலத்தை அவர்களால் உறுதிப்படுத்த முடியும்.

இதுவே 1945களில் பன்மொழிகள் தெரிந்த ஈழத்தின் தலைசிறந்த மொழியாராய்ச்சி வரலாற்றாராய்ச்சியாளரான கத்தோலிக்க அமலமரித்தியாகிகள் சபைக் குருவான பேரறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் தொடங்கப் பெற்று, பல்துறைகளில் முனைவரும் பன்மொழிகளில் புலமையாளருமான பேரறிஞர் சுயசிந்து தாவீது அடிகளால் தொடரப்பட்டு வளர்க்கப்பட்டு வந்த உலகத் தமிழராய்ச்சியை, இயக்கத்தன்மையான அறிவார்ந்த ஆய்வு மையமாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமாக மலேசியாவில் தனிநாயகம் அடிகளால் தொடங்கப் பெற்று உலகில் தமிழ் ஆய்விலும் தமிழிலக்கிய இலக்கண அக்கறைகளிலும் ஆர்வலர்களாக இருந்த அறிவார்ந்த சமுகத்தினரையும் படைப்பாளர் சமுகத்தையும் ஒன்றிணைத்து, பண்பாட்டு மீட்டுணர்வின் மூலம் தமிழின அடையாளம் தெளிவாகச் செய்யப்பட வேண்டுமென்று அடிகளார் முயற்சித்தார். ஆனால் இந்தியத் தலைமீடு இந்த தமிழர் அடையாள உருவாக்க நிலைநின்று உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தை நயத்தல் சுவைத்தல் பெருமிதப்படல் வழியாக தமிழின் தமிழர்களின் பெருமைகளை நினைந்து மகிழும் ஆய்வுமையமாக மடைமாற்றம் செய்தது வரலாறு.

இதனையும் ஓரளவுக்கு ஒழுங்குபடுத்தி 4வது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டை பணி ஓய்வு நிலையிலும் தனிநாயக அடிகள் யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடைபெறச் செய்த பொழுது அதனைச் சிறிலங்கா அரசாங்கமும் அதன் ஆதரவுத் தமிழ் அரசியல்வாதிகளும் தேச உருவாக்கத்திற்கான மக்கள் பண்பாட்டு எழுச்சியாகக் கருதி ஆயுதப் படைபலம் கொண்டு பண்பாட்டு இன அழிப்பின் மூலம் 11 ஈழத்தமிழரகளைப் படுகொலையடைய வைத்து பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களை பாலியல் அவமானங்களுக்கு உள்ளாக்கியமை 49 ஆண்டுகளுக்கு முன்னதான ஈழத்தமிழர் வரலாறாக உள்ளது. இந்த பண்பாட்டு இனஅழிப்பு இனத்துடைப்பு இனஅழிப்பு என்னும் சிறிலங்கா அரசாங்கத்தின் நன்கு திட்டமிட்ட அரசியல் கோட்பாடாக முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்பு அரசியல் செயற்பாட்டுத் திட்டங்களே ஈழத்தமிழர்கள் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பேணிக்காப்பதற்கான சீருடை அணிந்த முப்படைகளையும் தங்களுக்கான நிர்வாகத்தையும் தமிழீழ நீதிமன்றங்களையும் சட்ட அமுலாக்கத் தமிழீழப் பொலிசார் மற்றும் மக்கள் நல மக்கள் வளர்ச்சித் துறைகளையும் கொண்ட நடைமுறையரசை 1978 முதல் 2009 வரை 31 ஆண்டுகள் முன்னெடுக்க வைத்தது என்பது உலக வரலாறு.

2009இல் இந்த நடைமுறையரசு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பால் சிறிலங்காவால் ஒடுக்கப்பட்ட பின்னர் இன்று ஈழத்தமிழர்கள் பண்பாடட்டு மீட்டுணர்வுக்கான பேராயம் ஒன்றை உருவாக்கி அதனைத் தொடர்வதே தனிநாயக அடிகளுக்கான சிறந்த நன்றிச் செயலாக அமையும்.;. கூடவே 13ம் திருத்தம் - சமஷ்டி என்று அரசியல் பித்தலாட்டங்களால் ஈழத்தமிழர்களின் 1977ம் ஆண்டின் குடியொப்ப முடிவான பாதுகாப்பான அமைதிக்கும் வளர்ச்சிகளுக்கும் இறைமையின் அடிப்படையிலான தங்களின் தன்னாட்சியே ஒரே முடிவு என்ற மக்களாணையை 46 ஆண்டுகால அத்திசை நோக்கிய பரிணாம வளர்ச்சியின் பின்னர் தங்கள் தன்னல விருப்பில் மடைமாற்றம் செய்யும் ஈழமக்கள் விரோத முயற்சிகளை முன்னெடுப்பவர்களுக்கும், 36 ஆண்டுகளுக்கு முன்னதான இந்திய இலங்கை ஒப்பந்தம் இன்று இந்தியாவின் அனைத்துலக நிலைத் தேவைகளுக்கு முக்கியமாவதை ஈழத்தமிழர்களுக்கான தீர்வுக்கான தொடக்கமென மக்களை மயக்குபவர்களுக்கும், இவர்களுக்கான பதிலை 1980 களில் தந்தை செல்வா நினைவுப் பேருரையினைத் தான் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னதாக தனிநாயக அடிகள் நிகழ்த்திய பொழுது தந்துள்ளார்.

" இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 1956 இல் கொழும்பு நகர மண்டபத்தில் "தமிழர் பண்பாடும் அதன் சென்ற கால நிலையும் வருங்கால நிலையும்" என்ற மையப்பொருளில் விரிவுரையொன்றை நான் நிகழ்த்தினேன். அந்நாட்களில் தமிழ்மொழியை ஒதுக்கி தனிச்சிங்கள மொழியே அரசியல் மொழியாகவும் அரச ஆட்சி மொழியாகவும் நிறுவப்படல் வேண்டுமென்ற இயக்கம் பரவிவந்த காலம். நாட்டின் ஒற்றுமையை விரும்பித் தமிழ் மக்கள் அனைவரும் தமிழுக்கும் சமஉரிமை வேண்டுமென்று குரல் எழுப்பினர். இன்று 25 ஆண்டுகளுக்குப் பின்னர் 1980இல் நாம் எல்லாத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டுள்ளோம் நம் உரிமைகள் அனைத்தையும் இழந்து வாழ்கின்றோம். தந்தை செல்வா ஈழத்தனிநாட்டைத் தமிழீழத்தை அன்று கேட்கவில்லை. ஆனால் நாம் இத்தனை ஆண்டுகளாக எமக்கு இழைக்கப்பட்ட தீமைகளால் இன்று நாம் தனிநாடு கேட்கத் தூண்டப்பட்டுள்ளோம்."

உலகின் தன்னிகரில்லாத பேரறிஞர் தவத்திரு தனிநாயக அடிகளின் 1980ம் ஆண்டு விளக்கமிது. அதன் பின்னர் கடந்த 43 ஆண்டுகளில் பாரிய இனஅழிப்புக்களை ஈழத்தமிழர்கள் சந்தித்த நிலையில் இன்றைய அரசியல் பித்தலாட்ட விற்பன்னர்கள் எந்தச் சிங்கள அரசாங்கம் இனஅழிப்பின் சூத்திரதாரியாக இன்றும் தொடர்கிறதோ அவர்களின் நிர்வாகப் பரவலாக்கல் ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வை ஏற்படுத்தும் என்பது வேதனையான ஒன்றாக உள்ளது. தனிநாயக அடிகள் போன்ற ஈழத்தமிழர்களின் உலகம் போற்றும் பேரறிஞர்களே தெளிவாக எடுத்துரைத்த ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் ஒரே வழி அவர்களின் இறைமையுடன் கூடிய தன்னாட்சியை உலகம் ஏற்க வைப்பதே என்பதை உணர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

• • •

### கொடுப்பனவில் ... தொடர்ச்சி ...

வலியுறுத்தல்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சொந்தமான சுமார் 700 மில்லியன் ஓய்வூதிய நிதி போதுமான ஆதாரங்கள் இன்றி மத்திய வங்கியில் தேங்கிக் கிடப்பதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்திருக்கின்றார். நுவரெலியா, கண்டி, மாத்தளை, மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் மக்கள் பெருந்தோட்டயாக்கம் ஆகியவற்றின் கீழ் தொழில் புரியும் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்ந்தும் கிடப்பில் இருந்து வருகின்றன. இந்த மக்களின் ஊழியர் சேமலாப நிதி நம்பிக்கை பொறுப்பு நிதி என்பன இதுவரை மக்களிடம் சென்றடையவில்லை.இது தொடர்பில் முழுமையாக ஆராயப்பட்டு உரிய தரப்பினருக்கு அந்த நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றைப் பெற்றுக் கொள்வது உழைப்போரின் உரிமையாகும். என்றபோதும் இவற்றை பெற்றுக் கொள்வதில் காணப்படும் குளறுபடிகள், இழுத்தடிப்புகள் என்பன தொழிலாளர்களை விரக்தி நிலைக்கு இட்டுச்சென்றிருக்கின்றன. இது தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் ஒரு அநீதியாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே இத்தகைய இழுத்தடிப்புகள் இல்லாதொழிக்கப்பட்டு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை உரியவாறு தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள தொழில்தருநர்கள் ஒத்துழைக்க வேண்டும். தொழிற்சங்கங்களுடன் இணைந்து பெருந்தோட்டங்களில் உள்ள படித்த இளைஞர் யுவதிகளும் இவ்விடயத்தில் சரியான வழிகாட்டுதல்களை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

• • •

### சர்வதேச ... தொடர்ச்சி ...

ஆயிரக்கணக்கில் புதைக்கப்பட்ட மனித புதைகுழிக்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணை வேண்டி சர்வதேசத்தின் மேற்பார்வையோடு நீதியான முறையில் விசாரணை செய்யப்பட வேண்டும் என இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் தேசிய மண்ணிலே பல்வேறுபட்ட இடங்களில் மனித புதைகுழிகள் இன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த மனித புதைகுழிகள் வெளியில் வருமானால் இலங்கை இராணுவம் இலங்கையினுடைய கடற் படை, விமானப்படை , பாதுகாப்பு படைகள் கேள்விக் குட்படுத்தப்படுவார்கள்.

குறிப்பாக இப்போது கொக்குத்தாதொவாயிலே கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, மண்டை தீவிலே இருக்கின்ற மனித புதைகுழி, இன்னும் பல இடங்களிலே இராணுவ முகாம்களிலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மனித புதைகுழிகள் என்பது இராணுவம் மற்றும் அரசபடைகளால் மிகவும் வன்மமான முறையிலே அவர்கள் அழைத்து செல்லப் பட்டு மிகநுட்பமானமுறையில்கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட தமிழ் உறவுகளுடையதாக இருப்பதனால் இப்போராட்டத்தில் இன்று மக்கள் அணிதிரண்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகத்திடம் நாம் கோருவது ஒரு நீதி விசாரணை வேண்டும்”

#### பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்

“சர்வதேச விசாரணை ஒன்றே கொக்குத் தொடுவாய் மனித புதைகுழிக்கு உரிய தீர்வை வழங்கும்.

பல மனித உடல்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் 2009 யுத்தம் முடிவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் உயிருடன் பிடிக்கப்பட்டு பொலிஸ், இராணுவத்துடன் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் எங்கு போனார்கள்? எங்கு அடைக்கப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்பது எதுவுமே இதுவரை தெரியாது.

எனவே உள்ளக விசாரணை என்பது சாத்தியப்படாத ஒன்று. உள்ளக விசாரணை அன்றி நிச்சயமாக சர்வதேச விசாரணையின் கீழ் இது விசாரிக்கப்படுமாக இருந்தால் தான் உண்மைகள் வெளிப்படும்.

அந்த உடல்கள் இருந்த அடையாளம், இருந்த வகை , புதைக்கப்பட்ட காலம் என்பன எங்களுக்கு சரியான பதில்களை கூறும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எனவே சர்வதேச விசாரணை ஒன்றே கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு உரிய தீர்வை வழங்கும்” என்றார்.

#### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம்

“காலாகாலமாக மனிதப் புதைகுழிகளே தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த பெரும் பரிசாக உள்ளது. செம்மணி முதல் கொக்குத்தொடுவாய் வரை இந்த விவகாரம் நீண்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு முதல் கொக்குதொடுவாய் மற்றும் அதனை அண்டிய முல்லைத்தீவின் எல்லைக்கிராமங்களில் பலர் படுகொலை செய்யப்பட்டனர். போர்க்காலப் பகுதியில் தான் இந்த புதைகுழிகள் தோன்றியிருக்க வேண்டும்.சர்வதேசத்தின் கண்காணிப்பில் மனிதப் புதைகுழிகளை அகழ்வுக்கு உட்படுத்த வேண்டும்”

### வடக்கு கிழ ... தொடர்ச்சி ...

தமிழர்கள் பெரும்பான்மை என்ற பதத்திற்குள் உள்ளனர்.ஏனைய பகுதிகளில் மூன்றாவது சிறுபான்மை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று கிழக்கு மாகாணசபையின் ஆளுனராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு அநீதி நடைபெறாது என்பதற்கு அர்த்தம் அல்ல. கிழக்கு மாகாண ஆளுனராக தமிழர் ஒருவர் ஏன் நியமிக்கப்பட்டார் என்பது இன்று அனைவருக்கும் விளங்கும் என நினைக்கின்றேன்.இந்தியா வடகிழக்கினை இணைத்து மாகாணசபை தேர்தலை நடாத்துமாறு வலியுறுத்தும் நிலையில் இந்தியாவினை சாந்தப்படுத்துவதற்கும் தமது நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதற்குமே தமிழர் ஒருவர் ஆளுனராக நியமிக்கப்பட்டுள்ளார்.ஆனால் கிழக்கு மாகாணசபையின் முக்கிய பொறுப்புகளின் செயலாளர்களாக சிங்களவர்களே உள்ளனர்.

ஆகவே 13வது திருத்த சட்டத்தினை வடகிழக்கினை இணைத்து அமுல்படுத்தும் நிலைமையேற்படுமானால் கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாக தமிழர்களிடமிருந்து பறிபோகும் நிலைமையே ஏற்படும்.ஏற்கனவே காணி பறிபோவதை தடுப்பதற்காக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பல போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில் காணி அதிகாரங்களை தனியாக கிழக்கு மாகாணசபைக்கு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணிகளும் பறிபோகும் நிலைமையையே ஏற்படுத்தும்.

எனவே அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்வுத்திட்ட விடயத்தில் வடகிழக்கு இணைந்த வகையில் தீர்வினை அதிகாரப்பகிர்வு செய்வதன் மூலம் மட்டுமே தமிழர்கள் ஓரளவு நிம்மதியாக வாழும் நிலையுறுவாகும்.மாறாக வடகிழக்கு பிரிக்கப்பட்டு அதிகாரங்கள் பகிரப்படுமானால் தமிழர்கள் மீண்டும் போராட வேண்டிய சூழ்நிலையே ஏற்படும் என்பது மிகவும் கவலையான விடயமாகவே பார்க்கப்படவேண்டியதாகும்.

• • •

### தமிழர்களுக்கு ... தொடர்ச்சி ...

அரசிற்கு சர்வதேசம் அழுத்தங்களைப் பிரையோகிக்க வேண்டும், தமிழ் மக்களின் அபகரிக் கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து வடகிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகள்மாபெரும்கவனயீர்ப்பை நடாத்தியிருக்கின்றனர்.

இது தவிர குருந்தூர்மலை விவகா ரத்தில் எமது சைவ வழிபாடுகளை மேற் கொள்ள லாமென நீதிமன்று கட்டளை பிறப்பித்தும், அக் கட்டளைகளுக்கு மாறாக சில இனவாத அரக்கர் கூட்டம் எம்மை வழிபாடுகளில் ஈடுபடாமல் தடுத்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக தமிழர்களின்மீது மாற்றான் தாய் மனப்பான்மையுடன்செயற்படும் இலங்கை அரசிற்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்கு முறை மற்றும், இனஅழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக நியாயமான தீர்வினை வழங்க சர்வதேசம் நேரடியாகத் தலையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

### மெடிற்றரேனி ... தொடர்ச்சி ...

ஒக்சைட்டு வாயு வளிமண்டலத்திற்கு சென்றுள்ளது. இது 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இரு மடங்காகும். துருக்கி, துனிசியா, சிரியா, குரோசியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் காட்டுத் தீ பரவி வருகின்றது. பல நாடுகளில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். காலநிலை மாற்றமே இந்த அனர்த்தங்களுக்கு காரணம் என ஐரோப்பிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### சீனாவின் ... தொடர்ச்சி ...

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானது. இதுபோன்ற தாக்குதல்களை தடுப்பதற்கு சீனா நடிவடிக்கைகளை எடுத்துள்ளதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

### வெளிவிவகார ... தொடர்ச்சி ...

அமெரிக்காவிற்கான முன்னாள் தூதுவராக பணியாற்றிய குயிங் (57) கடந்த மாதத்தின் பிற்பகுதியில் இருந்து பொது நிகழ்வுகளில் காணப்படவில்லை.

இது தொடர்பில் அனைத்துலக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்ட நிலையில் சீனா கடந்த செவ்வாய்க்கிழமை (25) புதிய வெளிவிவகார அமைச்சர் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

புதிய அமைச்சர் முன்னர் 10 ஆண்டுகள் வெளிவிவ கார அமைச்சராக பதவி வகித்ததுடன், சீனாவின் பொதுவு டமைக் கட்சியின் வெளிவிவகார கொள்கைப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி வந்துள்ளார். அவர் சீனாவின் பாதுகாப்பான தெரிவு என ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## மாண்பழித்த ... தொடர்ச்சி ...

### விளைவுகள்

**ஒன்று.** மெய்தேய் மக்களுக்கு பழங்குடியினர் தகுதி தருவதும், அதற்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்வதும், மலைவாழ் பழங்குடியினரின் ஒப்புதல் இல்லாமல் பழங்குடியினராக இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதும், வகுப்புவாத நோக்கத்தை நிறைவேற்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் உருவாக்கப்பட்ட அரசை தவறாக பயன்படுத்தி மக்கள் கூட்டத்தை தூண்டிவிடுவதும் மக்களாட்சியை அழிக்கின்றன. **இரண்டு.** மெய்தேய் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றினால் பழங்குடியினரை பாதுகாக்கும் அரசமைப்புச்சட்டத்தின் உறுப்பு 371 நீர்த்துபோய் விடும். பழங்குடி என்றால் "மலைகளை பெரும்பான்மையினரிடமிருந்து பாதுகாப்பவர்கள்" என்ற பொருள் பொருளற்று போய்விடும். **மூன்று.** மலைப் பகுதி குழு ஆணை 1972, மணிப்பூர் நிலசீர் திருத்தமும் நில வருவாய் சட்டமும் 1960, மணிப்பூர் மலைப் பகுதி ஊர்களின் அதிகாரங்கள் சட்டம் 1956, மணிப்பூர் மலைப் பகுதி மாவட்ட பேரவைகள் சட்டம் 1971 ஆகிய இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டங்கள் பயனற்றுபோகும்.

**நான்கு.** பழங்குடி மக்கள் பாதுகாக்கப்பட்ட, ஒதுக்கிவைக்கப்பட்ட காடுகளை அபகரித்து வைத்துள்ளனர் என்று ஆளும் பாசக அரசு தவறான செய்தியை பரப்புகின்றது. ஆனால் பழங்குடி மக்கள் சுதந்திரத்திற்குமுன்னும் மணிப்பூர் மாநிலம் உருவாகுமுன்னும் பூர்வீக குடிகளாக வாழ்ந்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்கள்தான் அந்த மண்ணுக்கும் மரங்களுக்கும் உரிமையாளர்கள். ஒதுக்கப்பட்ட காடுகளாக அறிவிப்பதற்கு எதிராக பழங்குடி தலைவர்களும், மனித உரிமை அமைப்புகளும் வழக்கு போட்டுள்ளன. ஆளும் பாசிச மாநில அரசு இந்திய ஒன்றிய அரசமைப்பு முறைகளை தகர்த்துவிடுகிறது. **ஐந்து.** பழங்குடியினர் தங்கள் குலதெய்வங்களை வணங்கி வந்தனர். 1894 ஆம் அண்டு கிறித்தவம் இங்கு பரவத்தொடங்கியது. 1901 ஆம் ஆண்டு 8 விழுக்காடு இருந்த கிறித்தவம் தற்போது 35 விழுக்காடாக வளர்ந்துள்ளது. 66 விழுக்காடு இருந்த இந்து 41 விழுக்காடாக குறைந்தது. இதனால் மதவெறி பிடித்தவர்கள் சமய வெறுப்பை விதைத்து நல்லிணக்கத்தை அழிக்கின்றனர்.

### கோரிக்கைகள்

**ஒன்று.** இதர பிற்படுத்தப்பட்ட தகுதியை பெற்ற மெய்தேய் மக்களை பழங்குடியினராக மாற்றாதே. **இரண்டு.** சமய வெறுப்பை விதைத்து அரசியல் ஆதாயம் தேடாமல் சமய நல்லிணக்கத்தை வளர்த்திடு. **மூன்று.** போதைப் பொருள் கடத்துபவர்கள், வந்தேறிகள், காடுகளை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் என்று குற்றப்படுத்தி இயற்கை வளங்களை சுரண்டாதே. **நான்கு.** இந்திய ஒன்றிய அரசமைப்பு தரும் பழங்குடி பாதுகாப்புச் சட்டங்களை அழிக்காமல் பாதுகாத்திடு. **ஐந்து.** பழங்குடி மக்களின் வாழ்வாதாரமான நிலங்களையும், காடுகளையும், வளங்களையும் அழிக்காமல், பழங்குடி உரிமைகளை பறிக்காமல் வளர்த்திடு.

இறுதியாக, மணிப்பூரில் நடந்த கலவரம் அரசு திட்டமிட்டு நடத்தப்பட்ட பயங்கரவாதமாகும். மணிப்பூர் ஒரு சோதனைக் கூடம். இது பிற மாநிலங்களிலும் நடத்தப்படும். ஆர்எஸ்எஸ் உறுப்பினர்கள் மெய்தேய் மக்களோடு கலந்து இந்தக் கலவரத்தை நடத்தினர். மக்களாட்சிக்கு விழுந்த பேரிடியாகும். இந்திய ஒன்றிய அரசின் அரசமைப்புச் சட்டத்தை செயலிழக்க செய்யும் செயல்பாடாகும். பாசக அரசே நிலங்களை பழங்குடியினருக்கே திருப்பி கொடுத்து பழங்குடியினரின் உரிமையை பாதுகாக்க வேண்டும்.

• • •

## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

முற்பட்டால், அதனை அவரால் பெறமுடியாமல் போகலாம். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் மட்டுமன்றி பொதுஜன பெரமுன கூட அதற்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுக்கலாம். பேரினவாத கட்சிகளின் அண்மைய எழுச்சிக்குப் பின்பாக ராஜபக்ஷக்களே இருக்கின்றார்கள் என்ற கருத்தும் உள்ளது. ஆக, 13 ஐ நடைமுறைப்படுத்த முற்படுவது தனக்கு ஆபத்தானதாக முடியலாம் என்ற கருத்து ரணிலுக்குள்ளது.

இதனால், இந்தியாவையும் தஜா பண்ணிக்கொண்டு, தமிழர்களையும் பகைக்காமல், சிங்கள மக்களின் ஆதரவையும் தக்கவைத்துக்கொண்டு செல்வதுதான் அவரது தற்போதைய உபாயம். அதனைத்தான் அவரது அண்மைக்கால நகர்வுகளில் காணமுடிகின்றது.

மாகாண சபைகள் எதுவும் இயங்காதுள்ள நிலையில் 13 ஐ நடைமுறைப்படுத்துவதோ அதிகாரங்களை வழங்குவதோ அர்த்தமுள்ளதாக இருக்காது. அதனால்தான் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் அதேவேளையில், அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் மோடியும் அதனைத்தான் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுக்களின் போது வலியுறுத்தியிருந்தார். ஆனால், ரணிலைப் பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தல்தான் அவரது முன்னுரிமைக்குரிய விடயம். அதற்கு முன்னர் எந்தத் தேர்தலை நடத்தவும் அவர் தயாராக வில்லை.

இந்த நிலையில் இந்தியா என்ன செய்ய முடியும்? என்று ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது, "இந்திய கொள்கை வகுப்பாளர்களைப் பொறுத்தவரையில் இது அவர்களுக்குத் தெரியாத ஒரு விடயமாக இருக்காது. ஆனால், இந்தியாவின் கடனுதவிகள் இலங்கைக்குத் தேவையானதாக இருப்பதால், அதனை வழங்கும் போது 13 ஐ ஒரு நிபந்தனையாக புதுடில்லி முன்வைக்கலாம்" எனச் சுட்டிக்காட்டினார். "பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கினால்தான் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையைத் தர முடியும் என்று ஐரோப்பிய யுனியனால் நிபந்தனை விதிக்க முடியுமாக இருந்தால், இந்தியாவினால் அவ்வாறான ஒரு நிபந்தனையை ஏன் முன்வைக்க முடியாது?" என்ற கேள்வியையும் அவர் எழுப்புகின்றார்.

ஆனால், இவ்வாறு நிபந்தனைகளை முன்வைப்பது சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு எதிர்ப்புக்கள் அதிகரிக்கும் எனவும், இலங்கை அரசாங்கம் மேலும் சீனாவின் பக்கம் சாய்வதற்கு அது வழிவகுத்துவிடலாம் என்றும் இந்தியா அஞ்சுகின்றது. ஏற்கனவே இலங்கை பெருமளவுக்கு சீனாவைச் சார்ந்தே இருக்கின்றது. இந்தியா எடுக்கக்கூடிய கடும் போக்கு இந்த நிலைமையை மோசமாக்கிவிடுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இந்தியாவுக்குள்ள இந்த தர்மசங்கடமான நிலையை ரணில் விக்கிரமசிங்க துல்லியமாக மதிப்பிட்டவராகவே காய்நகர்த்துகின்றார்.

இந்திரா காந்தி காலத்திலோ அல்லது ராஜீவ் காந்தி காலத்திலோ இருந்த நிலை இப்போது இல்லை. இந்த நிலையை புரிந்துகொள்ளாமல், மோடி சொன்னால் ரணில் செய்யத்தான் வேண்டும் என நம்பிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளின் நிலைதான் பரிதாபகரமானது. இலங்கை அரசாங்கத்தை பகைத்துக்கொண்டு எந்த ஒரு தீர்வையும் தமிழர்களுக்குத் தருவதற்கு இந்தியாவினால் முடியாது. அதேவேளையில், தமிழ் மக்களுடைய கட்டுப்பாட்டில் மாகாண சபை ஒன்றிருக்குமானால், அதன்மூலமாக சிலவற்றை சாதிக்கலாம் என புதுடில்லி எதிர்பார்க்கும். ஆனால், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ரணில் அரசாங்கம் இப்போதைக்குத் தயாராக இல்லை.

ஆக, தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் இப்போதைய நிலையில் உள்நாட்டுக்குள் இருந்துகொண்டு அவர்களால் எதனையும் சாதித்துவிட முடியாது. பாரிய போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய நிலையில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் இல்லை என்பதும் உண்மை. வெறுமனே இந்தியாவையும், சர்வதேசத்தையும் எதிர்பார்த்து அரசியல் செய்ததன் பலன்தான் இது என்பதை இப்போதாவது, தமிழ்க் கட்சிகள் புரிந்துகொண்டு மாற்றுப் பாதை ஒன்றையிட்டு சிந்திப்பது அவசியம்!

• • •

## வேகமாக ... தொடர்ச்சி ...

தடுமாறி நிற்கின்றது.

இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் இரண்டு வல்லரசுகள் இருந்தபோது தமிழீழ விடுதலைப்புலிகளை யாரும் தடைசெய்யவில்லை. பேர்லின் சுவரின் வீழ்ச்சியும், அதனை தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு ஏற்பட்ட சோவித்து ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கும் பின்னர் உக்ரைன் போர் ஆரம்பமாகும் வரை உலகில் ஒரு வல்லரசு என அமெரிக்கா வலம்வந்தபோது தான் எம்மீதான தடை கொண்டுவரப்பட்டதுடன், 2009 ஆம் ஆண்டு



நாம் அழிக்கப்பட்டோம்.

அதாவது தற்போது ஏற்பட்டுள்ள பல் முனைவாக்கப்பட்ட உலக ஒழுங்கு என்பது உலகில் விடுதலை நோக்கி பயணிக்கும் இனங்களுக்கு அனுகூலமானது. உதாரணமாக பலஸ்தீனத்தின் 1967 ஆம் ஆண்டுக்கான எல்லையை அங்கீகரிக்க போவதாக சொல்கின்றது ரஸ்யா. ஆபிரிக்க நாடுகள் பல காலணித்துவத்தில் இருந்து விடுதலை அடைகின்றன.

இது ஈழத்தமிழ் மக்களுக்கும் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க காத்திருக்கின்றது. ஆனால் சில நாடுகளின் வலைக்குள் வீழ்ந்து சில நாடுகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்து ஏனைய நாடுகளுடன் பகையை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு நிரந்தர அழிவை ஏற்படுத்தாது நாம் பயணிக்க வேண்டும். அதனை மேற்கொள்ளும் அமைப்புக்கள் மற்றும் அரசியல் தரப்பினரை நாம் பலப்படுத்துவதே விடுதலையை விரைவு படுத்தும்.

• • •

## பாடசாலைகளில் ... தொடர்ச்சி ...

தொடர்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி கல்வித் துறையில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்துள்ள போதும், அதனால் பல பாதிப்புக்களும் உள்ளன. பல்கலைக்கழககங் கள் இணையவளி கற்கை முறையை அறிமுகப்படுத்தி வருவது மாணவர்களிடம் சமூக பண்பாட்டை அழித்து வருகின்றது.

பல நாடுகள் தற்போது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து நாடுகளில் வகுப்பறைகளில் தொலைபேசி பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. சீனாவில் பாட நேரத்தில் 30 விகிதத்தை மட்டுமே இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்த அனுமதியுண்டு.

தவறான தொலைபேசி பாவனையில் இருந்து நாம் எமது பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும் என 2023 ஆம் ஆண்டுக்கான தனது கல்வி ஆய்வறிக்கையில் அது தெரிவத்துள்ளது.

## இளையோரே சிகரம் நீங்கள்

# அழிந்துகொண்டிருக்கும் இயற்கையை அழியாமல் பாதுகாப்போம்

கவிதா ஆல்பர்ட்

"வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோல் உயரும்
கோல் உயர கோன் உயர்வான்."

என்று இயற்கையில் செழித்த பூமியின் விவசாயத்தின் அற்புதத்தை, அதிசயத்தை, உண்மையை, நாம் கல்வி கற்கும் போது, இந்தப் பாடலின் வாயிலாக அறிந்திருக்கிறோம். இயற்கையின் புன்னகையில் நாற்றுகள் நளினமிடும் அற்புத அழகைக் கண்டு மகிழ்கின்ற நாடுகளும், அரசுகளும் செழிக்கும் என்பதை இதன் வாயிலாக அறிந்துகொள்ளும் நாம், அது தான் உண்மை என்பதையும் நமது அனுபவங்களின் வாயிலாகவும் அறிந்துகொண்டிருக்கின்றோம்.

இயற்கை அழகை நாம் கண்டு, ரசித்து, ருசித்து மகிழும் அதே நேரத்தில் 100 இளையோர்களில் 99 பேரின் கரங்களிலிருந்தும் இயற்கை தந்த பரிசை உண்டு முடித்து, குப்பைகளாக நின்ற இடத்திலேயே உதறிச் செல்கிறோம். விளைவு, பூமியில் பிளாஸ்டிக் மலைகளையும், கண்ணாடிக் கழிவுகளையும் விதைத்துச் செல்கிறோம்.



இது ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்க, விவசாய நிலங்களையும் விளைநிலங்களையும் அழித்து, வானளாவ உயர்ந்த கட்டடங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இதற்காக மலைகளும் இயற்கை வளங்களும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன..

முன்பெல்லாம் இளையோரின் பார்வை, சமூக நலன்களின் மீதும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதின் மீதும் படர்ந்திருந்தது. அதனால் இயற்கைக்குக் கேடு விளைந்தால், இளையவர்கள் பொங்கி எழுந்து, இயற்கையைப் பாதுகாப்பதற்கும் மீட்பதற்கும் போராடுவார்கள். இன்று அவர்களின் எல்லை சுயநலக் கூட்டுக்குள் சுருங்கிப் போய்விட்டது.

பெற்றோர் தங்களை வருத்திக்கொண்டு, தம் பிள்ளையின் எதிர்கால நலனே முக்கியம் என்றெண்ணிச் சுகபோக வாழ்க்கையில் அவர்களை வழிநடத்துகின்றனர். அதனால் அவர்களுக்கு வாழ்க்கையின் நன்மை, தீமை புரிவதில்லை. அதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையும் இருப்பதில்லை.

மனிதனைப் பண்படுத்த வேண்டிய கல்வி இன்று இயற்கையைப் புண்படுத்தும் நிலைக்கு மனிதனை மாற்றிக்கொண்டிருக்கிறது. அதிவேக தொழில்நுட்பம் மனிதனை இயங்க வைப்பதற்குப் பதிலாக கருவிகளை இயங்க வைத்து, மனிதர்களைச் சோம்பேறிகளாக்கிக் கொண்டு வருகிறது.

இளையோர் இருந்த இடத்திலேயே அனைத்தையும் பெற்று விடலாம். அதற்குப் பணம் மட்டும் இருந்துவிட்டால் போதும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். அழிந்து வரும் பூமியைப் பற்றிய எண்ணமும் அக்கறையும் அவர்களுக்கு இல்லை.

நீர்த்தேக்கங்கள் அழிக்கப்பட்டு வருவதனால், கடல் மட்டம் உயர்ந்துகொண்டு வருகிறது. சமநிலைப் பகுதியிலுள்ள நீர்மட்டம் குறைந்து வருகிறது. பல நாடுகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. ஆபிரிக்க நாடுகளில் பல நாடுகள் தண்ணீர்ப் பஞ்சத்தையும் உணவுப் பஞ்சத்தையும் எதிர்கொண்டு, இலட்சக்கணக்கான மக்கள் மரணித்துவருகின்றனர்.



பூமி வெப்பமாகிக் கொண்டிருப்பதால், அமெரிக்கா உட்பட பல நாடுகளில் காட்டுத்தீ ஏற்பட்டு, அழிவை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. சில நாடுகளில் எரிமலைகளும் நெருப்புக் குழம்புகளும் உருவாகி, விந்தையை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. கடல் மட்டம் உயர்ந்து வருவதால் பெரும்பாலான நாடுகளில் தரைப் பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் மட்டம் அதிகரிப்பது மட்டுமல்லாமல் நன்னீர் முழுவதும் உவர் நீராக மாறிவிடும் அவலநிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

சுயநலவாதிகளால் வனங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு, அழிக்கப்படுவதால், அதன் வளங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. முன்பெல்லாம் மாதம் மும்மாரி மழை பொழிந்தாலே அழிவை ஏற்படுத்தாத நிலப் பகுதிகள், இன்று கட்டடங்களாக உருமாறிப் போயிருப்பதால், இலேசான மழைக்கே தாக்குப் பிடிக்க முடியாத நெருக்கடியான நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, இயற்கையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட நாம் இன்று இயற்கையின் அழுகையில் நமது சுகபோக வாழ்க்கையை மாத்திரம் கட்டமைத்துக் கொண்டிருக்கிறோம்.



"ஒரு இலட்சம் படித்த இளைஞர்கள் ஒரு நாட்டில் விவசாயத்தில் ஈடுபடுவார்களானால், அந்த நாடு வளர்ந்து விடும்" என்று இயற்கை விவசாயத்துறையின் ஆர்வலரான நம்மாழ்வார் அவர்கள் குறிப்பிடுகின்றார். நாம் ஆராய்ந்து பார்த்தோமானால் அது உண்மை தான் என்பதனை உணர முடியும். இளையோர் நினைத்தால் எந்த விதமான சிகரங்களையும் தொட்டுவிடுவது என்பது சாத்தியமாகும்.

உலகிலுள்ள 500 கோடி மக்கள் இன்று விவசாயத்தைச் சார்ந்து தான் நிற்கின்றனர் என்றொரு புள்ளிவிபரம் கூறுகின்றது. அதனால் தான் இன்றளவும் இயற்கையும் அழிவுறாமல் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் உண்பதற்கான உணவும் பற்றாக்குறையில்லாமல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மனித அறிவு டிஜிட்டல்மயமாகி வருவது வளர்ச்சி என்று நாம் கருதினாலும் அது மிகப்பெரிய அழிவின் ஒத்திகையாக அமைந்துவிடக்கூடாது என்பது தான் இயற்கை ஆர்வலர்களின் விருப்பம்.

மனிதன் உடலுக்கும் மனதுக்கும் வேலை கொடுப்பது தான் ஆரோக்கியமான வாழ்க்கை முறை. செயற்கையான ஒரு அமைப்பு முறைக்குள் நம்மை அடக்கி வைத்து, ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உடற்பயிற்சி மேற்கொள்கிறோம் என்றால், அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு முறையாகும்.

ட்ரெட்மில்லைக் கண்டுபிடித்தவர் வாழ்ந்த காலம் 54. ஜிம்னாஸ்டிக்கை கண்டுபிடித்தவர் வாழ்ந்த காலம் 57. இப்படிச் செயற்கைக் கட்டமைப்புக்குள் வாழ வழிசெய்பவர்களாலேயே நீண்ட நாள் வாழ்ந்து நமக்கு வழிகாட்ட முடியவில்லை. அதே இயற்கையோடு, இதமாக இணைந்து வாழும் ஆமை 400 ஆண்டுகள் உயிர்வாழ்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டு;ம்.



ஆகவே இளையோர் அறிவை ஆதாரமாகக் கொண்டு, மூளைக்கு முன்னுரிமை கொடுத்தாலும் உடலுழைப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போது நாம் இயற்கையை நேசிப்போம். இயற்கையோடு இணைந்து வாழ்வோம். நமது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பவர்களாகி, நீண்டகாலம் வாழும் பேரின்பப்பேற்றினைப் பெறுவோம்.

இயற்கை சிரித்தால் தான் நம்மால் சிரிக்க முடியும். இயற்கை அழுதால் அது நம்மையும் அழவைக்கும் என்பதை இன்றைய இளையோர் உணர வேண்டும். மனதுக்கும் நினைவுக்கும் புத்துணர்வு தரக்கூடிய இயற்கையைப் பாதுகாப்பதில் இன்றே நாம் அக்கறை யுடையவர்களாக மாறு வோம்.

**தொடரும்**